# "மனதின்" திறமையும்!
# "அறிவின்" கூர்மையும்!!



பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



"மனதின்" திறமையும்!
"அறிவின்" கூர்மையும்!!

# பொருளடக்கம்


1. சந்தேகம்------------------------------------------------------------3
2. ஞானியின் நிலையில்-----------------------------------------------5
3. ஸத் ஸித் ஆனந்தம்-----------------------------------------------9
4. குடும்பிகளுக்கு---------------------------------------------------------19
5. மனதின் திறமையும் அறிவின் கூர்மையும்---------------------------23
6. உடல் உலகம் அநித்யம்--------------------------------------------43
7. கருணை-------------------------------------------------------------58
8. மாயவனும் மாயையும்-----------------------------------------------91


எல்லாம் நீ!



ஓம் (ஸத்தியவாக்கு)

ஸத்தியம் பேசு. தர்மம் செய்.

நாவை அடக்கு. கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்"

# "ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை"

# "நம்பினோர் கெடுவதில்லை"

# ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம்

# "ஓம்"

# "அகம் பிரம்மம், ஜகம் பிரம்மம்,"

# "அகமே எல்லாம்"

# "ஜகம், பரமம், ஜீவர்களும்;"

# "சிறிதும் இல்லை"

தெய்வம் மனுஷ்யாணும் (மனிதவடிவில் தெய்வம்)



உ

ஸ்ரீ ஸத் குரு திருவடி துணை!

நம்பினோர் கெடுவதில்லை!

நம்பிக்கையே தெய்வம்! நம்பிக்கையே ஸ்ரீ ஸத் குரு! நம்பிக்கையே மோக்ஷம்! நம்பிக்கை இல்லையானால், எதுவுமே இல்லை!

குற்றம் குறை :– குற்றம் என்பது உன் பார்வை! குறை என்பது நீ கேட்கும் வார்த்தை!

பழி பாவம் :– பழி என்பது கடும், சுடும், அபத்தமான வார்த்தை! பாவம் என்பது அதனால் விளையும் செயல்!

விபத்து ஆபத்து :– விபத்து என்பது நீ எதிர்பாராமல் நடைபெறுவது! ஆபத்து என்பது பலப்பரீட்சையினை நீயே தேடிக்கொள்வது!

இன்பதுன்பம் :– அது உன் எண்ணம். இன்பமே துன்பமாய் மாறும். துன்பமே இன்பமாய் மாறும்!

தப்பு தவறு :– தப்பு என்பது வார்த்தை. தவறு என்பது செய்கை! இவை அனைத்திலும், வாக்குவாதச் சொல்லும், வார்த்தையின் விளைவுகளே, அனைத்திற்கும் காரணமாக அமைவதால், வாக்கில் கவனம் தேவை. வாக்கு இறை குரு உணர்வோடும், இனிமையாகவும், குறைவாகவும் பேசலாம். அதனால் வினையும் பெருகாது. ஆனந்தமும் குறையாது! ஆகவே வாக்கை குறைத்தால் லௌகீகத்திலிருந்து, தெய்வீகத்திற்கும், பின் பரமார்த்திகத்திற்கும், கிட்டுச் செல்லும் மார்க்கமாகும்.



உ

சந்தேகம் என்பது ஓர் பலஹீனம்! பிளவுபட்ட நூல், எப்படி ஓர் ஊசி துவாரத்தில், நுழையாதோ, அதே போல், உண்மையை உணரமுடியாது! லௌகீகத்திற்கும், தெய்வீகத்திற்கும், பெரிய தடையாக, இருப்பதே சந்தேகமே! இங்குதான் நம்பினோர் கெடுவதில்லை, யெனச் சொன்னார்கள். நம்பிக்கை என்பது இறை சொரூபமாக இருப்பதால், உன் நம்பிக்கையே, இந்த இல்லாத உலகை, இல்லாமலேயே, ஆக்கவும் முடியும். உன் நம்பிக்கையே, இவ்வுலகின் இருப்புக்கு, பலம் கொடுக்கவும் முடியும்! குடும்பம், தொழில், உறவு, இவைகளின் சத்ருவே, சந்தேகம் தான். அதே போல், தெய்வீகத்திலும், ஸத்குரு வாக்கிலும், சந்தேகம் கொண்டால், சர்வ நாசம் அடைவான்! குருவின் வாக்கையோ, செய்கையையோ, சந்தேகம், களங்கம் கொண்டு நோக்கினால், அவன் ஈன பிறவிக்கு ஒப்பாவான். சந்தேகம் என்பது, மரத்தை உள் இருந்தே, அரித்து கெடுக்கும், கரையானுக்கு ஒப்பாகும்.

சந்தேகத்தை கெடுப்பது, நம்பிக்கையாகும். அந்த நம்பிக்கை, பரிபூரண சரணாகதியில் முடிவுறும். சரணாகதியில் முடிந்தால், அங்கு சந்தேகத்திற்கு இடமான, எந்த கேள்வியும் வரமுடியாது. வரக்கூடாது. அப்படி ஏதேனும், கேள்விகள் வருமாயின், அது நம்பிக்கையின், பரிபூரண சரணாகதி ஆகாது. விபரீதபுத்தியின் அங்கம், சந்தேகமும், சஞ்சலமுமாகும்! பேரானந்தமும், பிரம்மானந்தமும், நம்பிக்கையினால் கிடைப்பதாகும்!



உ

இறை குரு உணர்வோடு வரும்
எண்ணங்கள், தூய்மையாகவும்,
ஸத்தியமாகவும், பிரகாசிக்கும்!
உடல் உலக பொருள்களின் நாமரூப
மாக, வரும் எண்ணங்கள், உணர்ச்சி
வசப்பட்டு, அழிவனவாகும்!
அன்பினாலும், பணிவினாலும், கருணையினாலும்,
இனிமையாக வரும் வாக்கு, ஸத்தியமாய் துலங்கும்!
அஹங்கார, அதிகார, ஆதிக்கத்தினால், வரும்
வாக்கு, துக்கத்தை கொடுத்து, அழிவை உண்டாக்கும்!
உலக நாமரூப பொருள்களை, ஒருவருக்கு கொடுப்பது,
புண்ணிய பாபமாகும்! இறை குரு உணர்வோடு,
பதமாகவும், இனிமையாகவும், நிலை கண்டு,
ஒருவருக்கு வாக்கு கொடுப்பது ஸத்திய தர்மமாகும்!
வியாபாரம், விளம்பரம், ஆடம்பரம், இவைகள்
கூடிய பக்தி, ஆன்மீகம் அல்ல அவை விபரீத புத்தி
ஆகும்! எளிமை, இனிமை, நேர்மை, நம்பிக்கை,
இவைகள் கூடிய பக்தி, விபரீத புத்தியை நாசம்
செய்யும், ஆன்ம தர்மமாகும்! இறைவனிடம், இது
வேண்டும்! அது வேண்டும்! என கேட்டு கேட்டு,
அவஸ்தைகளை, பெருக்கிக் கொள்ளாமல், இறைவா
நீயே எமக்கு வேண்டும் என, அவனை மட்டும்
கேட்டால், அவஸ்தைகள் பின் தொடராது! அங்கு
ஆனந்தம் ஒன்றே நிலவும். நீயாகக் கேட்டால்
அனைத்தும் அவஸ்தையே! அவனைக் கொடுத்தால்,
அனைத்தும் ஆனந்தமே!



உ

கேள்வி:— மனிதகுலத்தைத் தவிர, நடப்பன, பறப்பன, நீந்துவன, ஊர்வன, ஆகிய அனைத்து ஜீவர்களுக்கும், "மனம் இல்லை" யெனத் தாங்கள் சொல்லும் போதும். மரம், செடி, கொடி, புல், பூண்டு, ஆகிய தாவர வர்க்கங்கள், வளர்வன, பகுதாகுதனிர்வன, பூ பிஞ்சு, காய், கனி, இவைகளை, கொடுக்கும் நிமித்தம், "ஓரறிவு" போடு இருப்பன, ஆகிய இவைகளோடும், எப்படி "உரையாடி" பேச முடியும்? இவை அனைத்திலும், மனம் இல்லாத தன்மையிருந்தும், அவைகளின், குறை நிறைவுகளை, உங்களிடம், எப்படி பகிர்ந்து கொள்ள முடியும்?

பதில்:— இது நல்ல விளக்கமான, அறிவுபூர்வமான, கேள்விதான். இக்காரியம் "இறைநிலை" யையும், "பரகருணையையும்" பெற்றவர்களுக்கே, சாத்தியமாகும். சாமான்யர்களுக்கு, இது சாத்தியமாகாது! இறைநிலை சாட்சியாகும். பரநிலை சர்வ சாட்சியாகும். இங்கு கேட்பவருக்கும், சொல்பவைகளுக்கும், "ஒலி அலைகள்" பயன்தராது. "உணர்நிலை" ஒன்றே பயன் படுத்தப்படும்.



உ

இந்த நிலைக்கு, ஜீவ வர்க்கங்களோ,
தாவர வர்க்கங்களோ, அதற்குத்
தகுந்த, புண்ணியம் பண்ணியவைகளே,
தங்கள் குறைவு நிறைவுகளை,
உணர்வால் உணர்த்தி, பயன் பெற முடியும். மற்றும்
அவை தனில், அருகில் உள்ள ஜீவ வர்க்கங்களோ,
தாவர வர்க்கங்களோ, புண்ணியம் இல்லையானால்,
உணர்வால் உணர்த்தி "பயன்" பெற முடியாது.
மேலே கூறிய, எந்த ஜீவவர்க்கங்களும், அதற்கு முன்,
"மனித இனமாக" இருந்த புண்ணியம் அல்லது சாபத்தால்!
தேடி, ஏதோ ஓர் "சுபலத்தால்" இந்த
நிலை பெற்றவர்களாகும். எந்த ஜீவவர்க்கங்களுக்கும்,
"ஆதி" உண்டு! "வியாதியும்" உண்டு!!
ஆனால், மனம் இல்லாததன்மையினால், "ஆகாமி
யம்" இல்லை யென்றே, சொல்லலாம். அதாவது
சஞ்சிதமும் உண்டு. கொண்டு வந்த பிராரப்தமும் உண்டு.
இங்கு தேடும் ஆகாமியம் இல்லை!



உ

"**பிரம்ம ஞேயம்**" எனச் சொல்வதில், அதற்கு, எங்கும், ஊசிநாட்ட இடம் இல்லாமல்; "**கண்ணும் காதும்**", உள்ளதென, உபசாரமாக சொல்வார்கள். நம்முடைய அனுபவ ஞானிகள். ஆகவே நிலைகண்டு, வினைகண்டு, பொருள் உணர்ந்து, மேலே கூறிய ஜீவ வர்க்கங்கள், (ஞானிகளின்) அவர்களின் "**அறிவு திருஷ்டியில்**" படும். அப்போது, அறிவு திருஷ்டியால், அவைகளை கிரஹிக்க முடியும். அந்த க்ஷணமே அச்ஜீவ வர்க்கங்களுக்கு "**வினைகூண்டு**" என்ன செய்ய வேண்டுமோ, அதை "**பரகருணையாக**" இருந்து கொண்டு; "**இறைநிலையில்**" செயல்பட முடியும் என, ஸ்ரீமஹான்களின், அனுபவ வாசகம் இருக்கிறது. இது லோகமாயாவின், மாயாகார்யமாகும். அங்கு ஞானிகளுக்கு, எந்த கர்மா சம்பந்தமும் இல்லை. அவை ஓர் விளையாட்டாக முடிந்து விடும். ஆனால் அச்ஜீவ வர்க்கங்களுக்கு, "**வினை**" முடிவுறும். முழுமையாக முடிவதில்லை.



உ

ஆனால் எங்கோ, ஒன்றிரண்டு, ஜீவ வர்க்கங்களுக்கு மட்டும், ஆத்மாவம் விட்ட மறுக்ஷணம், "மனித ஜன்மா" பெறவாய்ப்பு உண்டு என, ஸ்ரீ மஹான்கள் சொல்லுவார்கள்.

இங்கு ஓர் ரகஸ்யம், என்னவென்றால்? அச்ஜீவ வர்க்கங்களுடன், ஞானிகள் "உரையாடியது" போல், ஓர் "கதை" சொன்னால் தான், "மனம்" படைத்த மனிதனால், நம்ப முடியும்.

மேலே கூறிய ஜீவ வர்க்கங்கள், ஞானிகளிடம் நாடி தேடி, செல்வதும் உண்டு. சில சமயங்களில், ஞானிகளும் அவைகளை, நாடி தேடி, செல்வதும் உண்டு. இங்கு ஞானிகள் "ஓர் புதுமையாக" சஞ்சாரம் செய்வதால், மனம் படைத்த புறப்பார்வைக்கு, அவை "இயல்பாக நடைபெறுவதாக" தோற்றும்.

ஞானிகளை, தேடிச் செல்கிறார்கள் என எண்ணத் தோன்றும்! பறவைகளோ, விலங்கினங்களோ, மற்றும் ஜீவ வர்க்கங்களோ, அவர்கள் இனத்தின்படி, குரல் கொடுக்கும் போது, "ஞானி ஒருவனே" அதை கிரஹிக்க முடியும். ஞானி ஒருவனுக்கே, சங்கேத பாஷையில், அனுபவம் உண்டு. அது "ஒலி" சம்பந்தமில்லை. அது "உணர்வு" சம்பந்தமாகும்.



"ஒலி" வடிவத்திற்கு, விளக்கம் தரவாம்.
"உணர்வுக்கு" அதை
உணர்பவரே, வரிவடிவில், "கதை"
வாக்கு வடிவில்,
பாணியில் விளக்கம் தர இயலும்.
அந்த கதை பொய்யாகும்! நடைபெற்ற காரணம் மெய்யாகும்.
மேலே சொன்ன, இவை அனைத்தும், உலக நாமரூப வடிவில்,
"மெய்யே!"
ஆனால் மேலே சொன்ன, இவை அனைத்தும், "உண்மை"
நிலையில், "அன்புருகு ஆகும்!!!"
"உண்மை" என்பது "ஸத்சித்ஆனந்தமே!!!" இந்த ஸத் ஸித் ஆனந்தத்திற்கு,
ஸ்வய ஞான அனுபவ பாடலில், ஓர்பாடல் உண்டு. முன்பு அதற்கு
விளக்கம், தந்திருந்தாலும், இதை கவனமாக கவனிக்கவும்!

## "பாடல்" 66.

இருக்கிறது! இயங்குகிறது! இன்பமாய்தோன்றுகிறது!
இப்படி சொல்லும், நாமரூப ஜகத்தில், மேலே கூறிய மூன்றும்,
பர சொரூப நிலையாகும். பின் கூறிய, நாமரூபம் இரண்டும்,
ஜக சொரூபமாகும். மேலே கூறிய ஐந்துமே, வாக்கிய
விளக்கங்களாகும். இங்கு எண்ணும் எண்ணமும், சொல்லும்
வாக்கும், மௌனமானால், செயல் என்ற கர்மா, இல்லா தொழியும்.
இதை எப்படி, எண்ணும் எண்ணத்தையும், அதனால் வரும் வாக்கையும்



ஓ

மௌனமாக்க முடியும் என்றால்?
நாமரூப ஜகத்திற்கு, தோற்றம், இருப்பு,
மாற்றம், மறைவு, என நான்கு உண்டு.
ஆனால் இவை அனைத்தும், "மண்ணே"!

மண்ணுக்கு அன்னியமில்லையென்பதே வாக்கியம்.
இதை கவனித்தால்? கல், மண், ஜலம், மரம், செடி,
கொடி, புல், பூண்டு என, எட்டில் இந்த நாமரூப
உலகம், முழுவதும் அடங்கும். இவை அனைத்தும், வாக்கிய விளக்கத்திற்காக, "இயற்கை"!
எனச் சொல்லலாம். இவை அனைத்திலும் "மனம்"
படைத்த மனிதன் மட்டுமே, "புத்தி, சித்தம்",
என்கிற மமதையை கற்பனையை ஓடவிட்டு, "ஆசை"
களையும், "தேவை"களையும், விருத்தி செய்து கொண்டு,
மேலே கூறிய எட்டு இயற்கைகளின் பொருள்களையும்,
ஒன்றோடொன்று, பின்னிப்பிணைந்து, "மனோ
வடிவில்"! நாமரூபங்களை, உண்டாக்கிக்
கொள்கிறான். இவை அனைத்தையும், மண்ணே என உணர
முடியாமல், நாமரூப மயக்கத்தில், விழுந்து விடுகிறான் மனிதன்.
இது மனதின் சிருஷ்டியே தவிர, இயற்கை என்ற இறைவன்,
சிருஷ்டி அல்ல என்பதை, திட உணர்வினால் உணரவேண்டும்.



இப்படி ஏற்பட்ட மனதின் சிருஷ்டியை, தான் வடித்த கற்பனை வடிவ பொருள்களையே, அஹங்கார, அதிகார, ஆதிக்க, அபிமான "உரிமை" கொண்டாடியும்; சொந்த பந்த நிலையில் "உடைமை" பாராட்டியும்; இப்படி இந்த, ஆறுவித தோஷ குணங்களால், பண்டப் பரிவர்த்தனம் (கொடுக்கல், வாங்கல்;) செய்து கொண்டு, "கொடுத்ததை" வாங்கும் நிமித்தமாகவும் "வாங்கியதை" கொடுக்கும் நிமித்தமாகவும் மேலும் மேலும், ஜன்மாவை பெருக்கிக் கொள்கின்றனர். இதற்கு, இறைவனும் பொறுப்பல்ல / மஹான்களும் பொறுப்பல்ல "மனம்" படைத்த "மனிதனே" பொறுப்பாகும். எடுத்த இடத்திலேயே (மண்ணிலேயே) அவைகளை, எல்லாம், நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே! என இயற்கையென்ற, இறைவனிடம் ஒப்படைத்து விட்டால், வினையும் தொடராது! ஜன்மாவும் கிடையாது! இனி விஷயத்திற்கு வருவோம்.

முன்னே கூறிய, எட்டு இயற்கையின், அம்சங்களும், (மண், கல், ஜலம், மரம், செடி, கொடி, புல், பூண்டு) இயற்கையாகவே இருக்கும் போதும், இந்த மனிதனே அவைகளுக்கு "நாமம்" சூட்டினன். அந்த ரூபம் அதுவே.



உ

பின் தன் மனோமய கற்பனையால், தேவைகளையும், ஆசைகளையும், விருத்தி செய்யும் போது, இந்த எட்டையும், ஒன்றோடு ஒன்றை பின்னிப் பிணைந்து, "ஓர் நாமா"வை வைத்து "ஓர் ரூபம்" உண்டுபண்ணி, அதை நோடி குணங்களாக்கி, வினைய விளையாட்டில் (நாமரூப மயக்கத்தில் மயங்கி) விளையாடுகிறான்.

"ஸ்ரீ": — இப்போது இயற்கையின் நியதியாலோ, அல்லது, செயற்கையின் வழியிலோ, ஓர் பொருள் நாமரூபம் (உதாரணம் மண்) தாங்கும் போது, "அது அதுவாகவே" இருக்கிறது. இயற்கை நியதியாலோ அல்லது செயற்கை வழியிலோ, அவைகள் மாறும் போதும், "அது அதுவாகவே" இருக்கிறது. அதுபோல, அவைகள் எத்தனை விதமாக, எத்தனை மாற்றம் ஆனாலும், "நாமரூபம் மாறுபடும், வேறுபடும்! ஆனாலும் அவைகளெல்லாம், "அது அது"வாகவே இருக்கும்!

(மண்ணில் வந்த பொன்னும், பொன்னில் வந்த ஆபரணமும், நாமரூபம் தான் வேறுபடுகிறதேயன்றி, அவை மண்ணுக்கன்னியமில்லை. எத்தனை விதவிதமாக, பெயர் சொல்லி அழைத்தாலும் அவைகள் "மண்" தானே?) ஆக இங்கு, நாமரூபம் மாறுபட்டும், வேறுபட்டும், தோற்றங்கள் அழைக்கப்பட்டாலும், அவை அனைத்தும், "மண்ணுக்கு" அன்னியமில்லாததையே, சுட்டிக்காட்டி, எல்லாம் "ஸத்தாகவே" இருக்கிறது என அநுபவ ஞானிகளால், உணர்த்தப்படுகிறது!



உ

ஓம்.

"ஸித்": — மனமாக இருக்கும் போது, ஒரே எண்ணம் என்றும், அம்மனமே புத்தியாக மாறும் போது பற்பல நாமரூப கற்பனை என்றும், அப்புத்தியே சித்தமாக மாறும் போது, அந்தந்த நாமரூபங்களில், ஓர் பிரேமையுடன், பற்றி இந்த "சித்தமே கிரீடிக்கிறது" (விளையாடுகிறது) எனப் பொருள் கொள்ளல் வேண்டும். இங்கு மனமும், புத்தியும் சித்தத்தின் அம்சமே யன்றி, வேறு இல்லவே இல்லை! இங்கு இப்போது, அந்த நாமரூபங்களிலும், "ஸத்தாகவே"! இருந்த, அந்த காலமீது "ஒன்றே" ஸித் என்ற ஸித் சொரூபமாக மாறி, சித்தத்தின் உள்ளே புகுந்து, அந்த "ஸத்தை" அசைவதைப் போல், ஓர் மாயா ஜாலம் காட்டுகிறது எனப் பொருள் கொள்ள வேண்டும்! இதில் ஓர் உண்மை என்னவென்றால், பிம்ப சந்திரன் அசைவதில்லை ஜலத்தில் தோன்றும், பிரதிபிம்ப சந்திரன் அசைகிறது. அதைப் போல, ஸத்தே எந்த விநாடியும், "தாம்தாமா ஸாங்கியஸ்"! அசைவதில்லை. சுக சொரூபமாகவே இருக்கிறது. ஸித் சொரூபமே, புத்தி சித்தம் என "மனமே" வடிவாய், ஸத்தை அசைப்பதைப் போல், ஓர் காட்சியை காட்டுகிறது.



உ

ஜலத்தில் தோன்றும் சந்திரன், எப்படி அசைகிறதோ? அந்நிலையில், மனம் என்ற "சித்தத்தில்" தோன்றும் வஸ்தும், அசைவதைப் போல், தோற்றும். ஆனால் வஸ்து அசைவதில்லை! (ஸித்தே ஸித்தமானதென, கொள்ளல் வேண்டும்) அசைவு என்பது எதைக் குறிப்பிடுகிறதென்றால், "மனதின் நுகர்ச்சி" ஆகும்!

நுகர்ச்சியென்பது, உடைமையும் உரிமையும், பாராட்டி "சொந்தம்" கொண்டாடுவதாகும். இதுவே "ஸித்தின் சித்தம் ஆகும்"!

3. ஆனந்தம்:— இதில் கூறும் ஆனந்தம், "பேரானந்தத்தில்" தொடங்கி, "பிரம்மானந்தத்தில்" முடிவுறும்.

பேரானந்தம் என்றால், பெயரளவில் ஆனந்தம் என்றும். ஸ்ரீபகவன் "நாமஸ்மரணையின்" (ஸ்ரீபகவான் பெயரளவில்) ஆனந்தம் என்றும்.



உ

கொள்ள வேண்டும். இந்த ஆனந்தத்தை, பிரித்துப் பார்ப்பது என்றால்?

"ஆ" என்றால், "பசு", இந்த பசுத் தன்மையாகி, பாசத்தின் "முடிவிடமே" (அந்தமே) ஆனந்தமாகும்.

லௌகீகத்தை, விஷய (விஷம்) ஆனந்தம் என்றும்; "சிற்றின்பம்" என்றும்; (சிறிய இன்பம் என்றும்) கொள்ள வேண்டும். இந்த சிற்றின்பமாகிய, விஷயானந்தத்தை, முழுமையாக விட்டாலன்றி, பேரின்பம் எனச் சொல்லும், பேரானந்தம் பெறவே முடியாது, என்பதே ஸத்தியம்.

அந்த பேரானந்தத்தை, முழுமையாக "நமக்குள் அடக்கி; தாம் தாமான" தன்மை பெற்றாலன்றி, "பிரம்மானந்தம்" பெற முடியாது.

விஷயானந்தம் என்று, சொல்லக் கூடிய, சிற்றின்பமானது, ஓர் நாணயம் போன்றதாகும். அந்த நாணயத்தின், ஒருபுறம் "இன்பம்" மறுபுறம் "துன்பம்" ஆகும்.

விஷயானந்தம்:— நாமரூப குண விசேஷங்களால், பெறும் தோஷ ஆனந்தமாகும் (இது இன்ப துன்பமே)

பேரானந்தம்:— ஸ்ரீபகவன் நாம ஸ்மரணையால், வைராக்யில் (நாமாவில்) உண்டாகும் ஆனந்தமாகும்.

பிரம்மானந்தம்:— ஸத் ஸித் ஆனந்தத்தின், நித்ய ஆனந்தமாகும்.



"மனம்" ஜீவ நிலையாகும்!

"அறிவு" இறை நிலையாகும்!!

அறிவே தாமாகி, லௌகீகமும், தெய்வீகமும் தமக்குள்ளேயே மறைந்த "ஞான போகம்" என்பது "அதுநாம்" என்ற "பரநிலையாகும்!"

ஸத்துக்கும், ஸித்துக்கும், விளக்கம் தந்தோம். இனி இதன் முடிவாகிய, ஆனந்தத்திற்கு, சிறிது விளக்கம் தருகிறோம். ஓர் அன்பரின், பாடலில் வரும், கடைசி வாசகமாவது:-

"ஸத்தாகி, எம் சித்தமிசை, குடிகொண்ட, அறிவான தெய்வமே! தேஜோமயானந்தமே!" என்றார்.

இதில் இருந்து, என்ன உணர்கிறோம் என்றால்? "ஸத்தே ஸித்தாகி" வருகிறதென்றும், அந்த ஸித் சொரூபமே, "ஆனந்தமாக" வடிவு எடுக்கிறதென்றும், பொருள் கொள்ளல் வேண்டும்! அதாவது?

"ஸத்" என்றால், அசையாத எதையும் அசைக்காத, ஒன்றாகும்!

"ஸித்" என்றால், அசையாத அசைக்காத, ஒன்றை "தாமே சித்தமாகமாறி" அசைக்கும் ஒன்றாகும்!!



"ஆனந்தம்" என்றால், ஸித்தே சித்தமாக மாறி, தம்முடைய "நாம ரூப கற்பனையை" அசைவதைப் போல், ஓர் மிரட்சியான, தோற்றத்தை உண்டு பண்ணி, "மனதின்" தோற்றத்திலேயே, கிரீடித்து, மறைந்து நுகர்ச்சியாவவேயே, ஓர் "இன்பத்தை" அனுபவிக்கிறது. அது ஆனந்தம் என பேசப்படுகிறது. இந்த மறை நுகர்ச்சியானது, நாமரூப, லௌகீக ஆனந்தம் என்றும். தேவ தெய்வ கற்பனை வடிவில், "சூட்சும நாமரூபத்தையும், "பேரானந்த" நிலையில் பரமபதம், எனச் சொல்லும், "பதமுக்தி"யையும் உண்டுபண்ணி, அனுபவிக்கும் ஓர், "பெயரளவில்" அனுபவிக்கும், ஓர் "பேரானந்தமாகும்"! மேலே கூறிய, விஷயானந்தமும். பேரானந்தமும், ஸத்தியமல்ல! நியமானதும் அல்ல. "ஜகத், ஜீவ, ஈஸ்வராதிகளின்" நாமரூபங்கள் அனைத்தும், ஆவரணமும் அல்ல! அது தோன்றிய பொன்னும் அல்ல! அப்பொன் தோன்றிய "மண்ணே"



உ

என்ற உறுதி நிச்சயத்தில், வழுவாது
நின்று, "தத், த்வம், அஸி"!
என்ற நிலையில், ஸ்வய அனுபவத்தை
கூட்டி, தத்பதமாகிய இறைசொரூபமும்,
த்வம்பதமாகிய ஜீவசொரூபமும், அஸி பதமாகிய
"பரசொரூபத்திற்கு"! அன்னியமின்றி
யென, தாம் தாமாய் இருப்பதே, பிரம்மானந்தம்!
ஆகும் என, அனுபவ ஞானிகள் கூறுவர்.
ஓர் உண்மை என்னவென்றால்? பசுத் தன்மையாகிய, "நாம
ரூப ஜகமும்"! பாசத் தன்மையாகிய, உடைமை,
உரிமை, ஆதிக்கம், செலுத்தும், சொந்த பந்தங்களும்,
விட்டாலும். மேலே கூறிய இவைகளுக்கு ஆதாரமாக
வும், ஆதரவாகியும், ஆதாரமாகியும், இருக்கும் இறை
சொரூபமாகிய, "லோகமாயாவையும்
இல்லாமல் செய்து, அனைத்தும் "நாமே"! என்ற நிலை
பெறாமல், நாம் "ஸத் ஸித் ஆனந்தம்"!
பெறவும் முடியாது. ஆகவும் முடியாது. இதுவே பிரமாண உண்மை
யாகும்!

உ

# "குடும்பிகளுக்கு"!



விளக்கை பழம் என எண்ணி, அதைச்
சுவைக்க விரும்பி, விளக்கில் விழுந்து,
கருகி சாம்பலாகும், விட்டிலின் தன்மை கொண்ட,
"அறியாமை"யின் (கவனக்குறைவான)
குடும்பிகளான குழந்தைகளே! நீங்கள் அனைவரும்,
"உண்பதிலும்"! "உடுத்துவதிலும்"! (அழகுபடுத்துவதிலும் ஆவரண மயக்கத்திலும்) "உறங்குவதிலும்"! (காமபோகத்திலும்) அனுபவிக்கும், அவை
இன்பம், இன்பமும் அல்ல! அவை ஆனந்தமும் அல்ல!!
அவை "விஷய (விஷம்) போகமாகும்"! (ஆனந்தமாகும்)
மேலே கூறிய மூன்றும், "பற்பல" விதமாகவும்,
"பற்பல" நாமரூபங்களாகவும், அனுபவிக்கப் படுகிறது.
இவைகளை, மாற்றி அமைக்கப் பழகி விட்டீர்களானால்,
விஷய ஆனந்தத்தையே, பேரானந்தம் ஆக்கி விடலாம்.
அவைகளை பேரானந்தமாக மாற்ற சில வழிமுறைகள்!!!
இம் மூன்று அணுகுமுறையிலும், அனுபவ முறையிலும்.

"சாப்பிடும்போதும்! புனையும் (அணியும்) போதும்! புணரும்போதும்!"
(உடலுறவு கொள்ளும் போதும்)



1. "ஹரே ராம் ஹரே ராம்"
என்ற ஸ்மரணையை மனதினுள்ளே இடையறாது
ஜபித்துக் கொண்டே இருங்கள்.

2. நீங்கள் புசிக்கும், புனியும், புணரும் அனைத்து
"நாமரூபங்களும்", "இறை குரு"
(இறை குரு)
தந்தது என்றே; அதிலேயே சாக்ஷாத்காரமாக
இருக்கிறார்கள் என்றே. எண்ணம் மாறாமல் இருக்க வேண்டும்.

3. அதிகாரியங்களை, "இறை குரு தான்"
நடத்துகிறார் என்ற திடவுணர்வுடன், உங்கள் உடலை
யும், அனுபவிக்கும் உடலையும், "புதுமைகளாக"
வும் உணருங்கள்! பொருளையோ, உணவையோ, அனுபவிக்
கும் போது, "வினை" முடிவது என உணருங்கள்.

4. "காம" எண்ணமோ "மோஹபோக"
எண்ணமோ, வரவிடாமல் "ஸ்வாமிநபுடே"
எண்ணம்;
தீமையோ, புண்ணிய பாபமோ இல்லையென் (றும்) முடிவு செய்யுங்கள்.

5. எல்லாம் அவன் பொருள்! எல்லாம் அவன்
செயல் என்பது உறுதியானால், "உன்" செயல்
எதுவும் இல்லை! "உனக்கு" புண்ணிய பாபமும் இல்லை.
இல்லைந்திலும், அதிக கவனமாக இருக்கவும்.
உனக்கு இருப்பும் இல்லை!



உ

குடும்பிகளுக்கு பொது விதி!

A. போக மோஹ எண்ணங்களை குறைக்கலாம்!

B. போக காலங்களை குறைக்கலாம்!

C. எம் பட்டினத்தடிகள், சொன்னபடி:—

கறந்த இடத்தை நோக்குதே கண்! பிறந்த இடத்தை நோக்குதே மனம்!!

என்ற நிலையை மாற்றி, அங்கங்களை நோக்கும் கண்களை, சுற்று தாழ்த்தி "பாதங்களை"! நோக்கலாம்.

பாதம் கண்டால், பாதகம் இல்லை! என்பது பழமொழி.

D. அம்மனதை இத் "திருவடியே"! உனக்கு புகலிடம், அதன் "தாளியே"! ஆத்மாவே உன் ஸ்வய ஸ்வரூபம், எனவும் ஸ்மரிக்கலாம்.

E. பெண் என்றால் அது ஓர், "சேவையின்" சொரூபமேயன்றி, அது "போகப்பொருளும்" அல்ல! "வினையின்" பெட்டகமும் அல்ல. என உறுதி நிச்சயம் செய்யலாம்.

F. அங்கங்களை நோக்கும் நிலை ஏற்பட்டால், ஸ்நான பாரத்தை, அமுத கலசமாகவுணர். அடிவயிற்றை, எம் கண்ணன், யோக நித்திரை செய்யும் ஆலிலை யாக எண்ணி ஆனந்தம் அடைவாயாக.



உ

யோனியை, இத்தாவம் வந்த வழியிது.
இனி இந்த வழியாக, வராமல் இருப்பதற்கு
என்ன செய்ய வேண்டுமோ, அதை செய்வாயாக
என இறை குருவிடம், மனம் உருகி வேண்டி,
காம உணர்ச்சியை, கெடுப்பாயாக.

G. சினிமா, ஆண் பெண் உறவு, துர்க்காரியங்கள்,
காம ரஸனையான, எண்ணம் எண்ணமும், அதுபற்றிட
"ரஸனையாக" பேசாமலும் கேட்காமலும் இருக்கவேண்டும்.

H. "உதடு" என்பது (உதடு = உன்னை தடுப்பது)
உன் வாக்கை வெளியில், சிதற விடாமல் தடுக்கும்
ஓர் "தடுப்புச் சுவராகும்" என
எண்ணி, அதன் காமரஸனையை, ஒழிப்பாயாக.

I. "கூடா நட்பு கூடாது"!
பகல் காலங்களில் உடலுறவு கூடாது!
"ஆண்" & "பெண்"/"பெண்" & "ஆண்"!
சந்திப்பு உடல் உலக, பொருள், நாமரூப சம்பந்தம்,
இல்லாமல், "இறை குரு"! ஆன்ம உணர்வு
சம்பந்தமாக, இருக்க வேண்டும்!



உ

எம் ஆனந்தக் குழந்தைகளே! நீங்கள் ஸம்ஸாரியுமல்ல! நீங்கள் குடும்பியுமல்ல!

நீங்கள் "பந்தப்பட்ட" ஜீவனுமல்ல!

நீங்கள் ஆணுமல்ல! பெண்ணுமல்ல! **"ஜீவன் முக்தர்களே"!** இதில் கூறியுள்ள, விதிமுறைகள், அவஸ்யம் ஏற்றுக் கொண்டு, இறைகுரு **உணர்வுடன்,** சர்வார்ப்பணமாக, இருக்க வேணுமென்று, உங்கள் பாதம் பற்றி வேண்டிக் கொள்கிறோம்!

## "மனதின் திறமையும்"! "அறிவின் கூர்மையும்"!

மனம் என்றால், ஓர் எண்ணம்! புத்தி என்றால், அந்த எண்ணத்தின், விரிந்த கற்பனை! சித்தம் என்றால், விரிந்த எண்ணத்தின், இன்பதுன்பம்! என பொருள் கொள்க!

மனம் **"ஜீவஸ்வரூபம்"** ஆகும்!

அறிவு **"இறைஸ்வரூபம்"** ஆகும்!!

மனம் படைத்தவன் (மனதின் பிடியில் உடையவன்) மனிதன்!

அறிவை உடையவன் (அறிவு சொரூபமாக இருப்பவன்) இறைவன்!



மனம் ஜீவஸ்வரூபமாகிய (மனித உடலில்)
பஞ்சீகிருதம் பண்ணப்பட்ட, "வினை"
யால் பிணைந்த, தாவத்தை மட்டும், வினைக்குத்
தகுந்தபடி, ஆட்டி வைக்கும். இங்கு மனம்,
இயக்கத்திற்கு மட்டும், 'காரியமாய்'
அமையும். "விதி" யென்ற காலதேவன், அவ்வுடலில்
'காரணமாக' இருந்து இயக்குவான்!
இங்கு, அறிவு என்ற இறை சொரூபம், 'சாட்சியாய்'
இருந்து, கண்காணிப்பானேயன்றி, அவைகளுக்கு எந்த,
'பொறுப்பையும்' ஏற்கமாட்டான்.
முன்பு ஓர் மடலில், கூறியபடி, காலதேவன், பாரபக்ஷ
தோஷம் இல்லாமல், விதிகாச்சாரப்படி, நடத்தக்
கூடியவனென்றும்; "அறிவு" சொரூபமாகிய
(சாட்சி சொரூபமாகிய) இறைவன், கருணை மூர்த்தி
யாக, நடத்துவான் என்றும், அறிய வேண்டும்!
வினை, மனம், விதி (காலதேவன்) இவை மூன்றும், தனித்த
நிலையில் இயங்கிறதும் (விதிகாச்சாரப்படி இயங்கிறதும்)
"அறிவு" என்ற கருணை மூர்த்தியிடம் தம்மையர்ப்ப
ணமாக சரண்புகுந்து விட்டால், "விதி" என்ற



உ

கருமைக்கு ஆட்படாமல், நடை
பெறும் கர்மா, சுகமாக முடிவுறும்!
இங்கு, அறிவு கர்மாவை விலக்காது! விலக்க
முடியாது! விலக்கக் கூடாது! ஆனால் அதன்
"கருமையை" சற்று குறைக்க முடியும்!
ஓர் நிலையில், அறிவை "குரு" என்று சொல்வார்கள்.
மனம் என்ற புத்தியை, "சிஷ்யன்" என்றும் சொல்வார்கள்!
இதை இன்னமும், அதீத நிலையில், உணர்ந்தால்; கற்பனை
யின் மனமானது, கற்பனையை குறைத்து குறைத்து வந்தால்
அம்மனமே, "கூர்ந்த புத்தியாக"
அதுவே "அறிவாக" மாறிவிடும் என்று, அநுபவ
ஞானிகள் கூறுவர். இந்தமனமானது, விஷய வாஸனை
யில், "மோஹம்" கொண்டு, மூட்டிக்குனிவதைப்
போல், சஞ்சலம், துக்கம், பயம், கவலை கொள்ளும் போதெல்
லாம், அறிவானது தன் நிச்சய பார்வையால் (சாட்சி பாவனையால்) சொல்லா
மல் சொல்லி, "அறிவுறுத்தும்"! இதை
மனச்சாட்சி என, ஸ்ரீ மஹான்கள் அநுபவத்தில் கூறுவர்.



உ

எப்படியென்றால்? பிராப்த கர்மாவானது, ஓர் சுகமான கர்மாவாகும். அதில் ஆகாமிய மாக, நான், என்றல், என்னுடையது, என புகுத்தப்படும் போது, அவை வலிய கர்மா வாகவும், "கடுமை கொடுமை" யாகவும், மாறி விடுகிறது. அந்த கடுமை கொடுமை, இவைகளை, மனம் தாங்கமுடியாமல், "துன்புறும்" போது, மனச்சாட்சி யென்ற இறைவன், கருணைமூர்த்தியாக இருப்பதால், அவன் "கருணையின்" பார்வையால் மனதுக்கு உணர்த்தப்படும். (இப்படி செய்யாதே! இப்படி பேசாதே! இப்படி போகாதே! இதை தொடாதே! இதை பாராதே! என்ற நிலையில், அறிவுறுத்தும்) ஆனால், அந்த இனிமையில், "மோஹாவேசத்தில்" சிக்கிய இந்த மனமானது, அதை உணராது! அந்த போக வேகத்தில், இந்த மனமானது, பல முறை முட்டி முட்டி குனியும் போது, "ஓர் க்ஷணம்"! அந்த அறிவைக் கண்டுணரும் அது சமயம், இறை குரு கருணை, கை கொடுக்கிறது, என உணரலாம். அப்படி அந்த அறிவை மனம் பார்த்து விட்டால், பின் அறிவினால் கிரஹிக்கப்பட்டு, மனம் "வேகம்" குறைந்து, செயலற்றதாகிவிடும்! இதைத்தான் குரு சொல்ல, சிஷ்யன் கேட்கிறான் என, சொல்வதுண்டு.



இப்படியாக பல முறை "தவறுவது (மனித) மனதின் இயல்பு"!
"அப்போதைக்கப்போது, அம்மனதை தடுத்தாட்கொள்வது, "அறிவின்" சிறப்பு!
இந்த மனதிற்கு, பூர்வ கர்ம வாஸனையும், இந்த ஜன்மாவின், "பழக்க (வார்த்தை) வழக்க (செய்கை)" தோஷ வாஸனையானது, சாமான்யமாக போகாது தான். ஆனாலும் இறைகுரு "கருணையினையும்"! ஸத்ஸங்க இணைப்பினையும்; தடையற்ற அப்யாசத்தினையும்; இயல்பான "பொறுமை", "பணிவு", "நம்பிக்கையினையும்", அறிவு என்ற இறை உணர்வு, மேலும் மேலும் பெருகும்.
"இயற்கையே" இறைவன் வடிவம் என்றும்; "தெய்வம் மனுஷ்யரூபம்!" என்ற நியதியில், இறைவன் மனித வடிவங்களில், நமக்கு ஆவன செய்கிறான் என்றும்; அனைத்து நாமரூபங்களிலும், இறைவனே இயங்குகிறான் என்றும்; அந்த இயக்கத்திற்கு, "ஆதாரமாக" நம் மாயாவின், அம்சமான மனதை வைத்து, விளையாடிக் கொண்டிருக்கிறான் என்றும்; இந்த ஜீவனுக்கு இயக்கமே இல்லை என்றும்.



ஜீவனுக்கு (நமக்கு) இயக்கம், இருப்பதைப் போல் தோற்றுவது மாயா சொரூபமான "மனதின் பிணைப்பே" என்றும் அம் மனதின் பிணைப்பை, நம் இறைவனிடமே, விட்டுவிட்டால், இந்த "நாமரூப ஜகம்!" இறைவனுடையதாகி விடும். என்றும், நாமரூப ஜகம், இறைவனுடையதாகி விட்டால், இங்கு நமக்கு, எந்த பிணைப்பும், இல்லாத தன்மையில், நாம் "இறைவனின்" குழந்தையாகி, நாம் அவன் "அம்சம்" பெற்று விட்டால், பின் மாயையோ, அவித்தையோ, இல்லாத தன்மையில், எப் பயிற்சியும், எந்த முயற்சியும், இல்லாமல், "நாம் அதுவாகி" சும்மாவே, சுகமாக, ஆனந்தமாக, இருக்கலாம்!

"மனம்": — மனதின் வடிவம் வாஸனையே! அதாவது நாமரூப குண தோஷ எண்ணங்களே! அவை கற்பனையே தவிர, உண்மை இல்லை! இந்த நாமரூப ஜகமோ, தோற்றம் இருப்பு, மாற்றம், மறைவோடு, கூடியதாகும். இவை நான்கும், சதமல்ல சாஸ்வதமல்ல. இந்த மனம் எண்ணில் உண்டு. இந்த மனம் மறந்தால் இல்லை! இந்த நாமரூப ஜக வஸ்துக்களின் மேல், இந்த மனமானது, உடைமை, உரிமை, ஆதிக்கம், அதிகாரம், செலுத்துவதனால்,



உ

உலகம், இருப்புடையதாகத் தோற்றுகிறது.
மேலே கூறியவைகளை, செலுத்தாமல் விட்டு
விட்டால், அனைத்தும் "ஜடமே"!
அவை அனைத்தும், "மண்ணே"! ஆகவே
இங்கு, உலக இருப்புக்கு, இந்த "மனமே"
காரணமாக இருக்கிறதேயன்றி, இதற்கு வேறு, எவரும்
பொறுப்பாக மாட்டார்கள். ஓர் உண்மையென்னவென்றால்?
"படைத்தவன்" எண்ணினால், படைப்பு மறைந்துவிடும்!
"படைப்பை" எண்ணினால், படைத்தவன் தம்மை மறைந்து கொள்வன்!!
"படைப்பு" வினைப் பெருக்கம்! "படைத்தவன்"!
வினை நீக்கம்! உன் "மனம்" கொண்டு வாங்கிறாய்!
வினை பெருகிக் கொண்டது! "உன் மனதால்"
எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே!
என "சர்வாப்பணமாக" விட்ட
மறு க்ஷணம், வினையுமில்லை! வினை சம்பந்த நாமரூபமுமில்லை!
"விட்டநிலையில்"! சந்தேகமும்;
அதனால் தோன்றும், கலக்கமும்; அதனால் தோன்றும்
பயமும்; வரமுடியாது! வர இயலாது!! வரக் கூடாது!!!
அப்படி வருமாயின் "நீ மனதை ஜயிக்கவில்லை"
மனதை ஜயிக்காதவன் பிறந்தும் வீணே!



உ

மனதின் சாமர்த்தியத்திறனாலேயே இவ் உடலும், அதைசார்ந்த பொருள்களும், அதை வைத்திருக்கும் உலகமும், இயங்கு வதைப்போலும்; அதனால் இன்பமும் துன்பமும், "லாப நஷ்ட" வடிவில், இயங்குகிறதே யன்றி, மனம் இல்லையானால், அந்தந்த "நாமரூப ஜகமும்! வெறும் ஜடமே!" இந்த மனமானது, எண்ண வடிவில், நுணுக்களை வகுத்துக்கொண்டு (உப்பு உறைப்பு புளிப்பு, என்ற நிலையில்) "காரசாரமாக"வும்! ஆசை, மோஹம், போகம், காமம் என்ற நிலையில், (இனிப்பு என்ற நிலையில்) "இன்பமாகவும்" வெகு வெகு சுவாரஸ்யமாக விளையாடிக் கொண்டிருக்கிறது. அந்த மனதின் வசம் அகப்பட்டு, "பந்தப்பட்ட ஜீவர்களுக்கு!" மனதின் இயக்கத்தை உணர முடியாமல், நாமரூப ஜகமாகிய, உலக பொருள்களும், சொந்த பந்த பாச "உறவு நட்பு" ஆகிய இவைகளே (இவர்களே)



உ

பிரமாணமாக, நம்பி, நம்பி, அதன் மாற்றத்தை உணர முடியாமல், ஏமாறிக் கொண்டு, அந்த ஏமாற்ற வழுவான எண்ணத்தின், காரணமாக, மீண்டும் மீண்டும் "பிறப்பிறப்பை!" தேடிக் கொள்கின்றனர்!

மேலே கூறிய, நாமரூபமொருள்களோ, உறவும் நட்பும் இவைகளும் "வினையின்" தன்மையால், ஒருவருக்கொருவர், பரிமாற்றம் பண்ண, வந்தவர்களேயன்றி, உறவு கொண்டாடி கூடிக்குலாவி, பிறவி எடுக்க வந்தவர்கள் இல்லையென, இந்த மனதாலேயே உணர்ந்து, "அம்மனதை, இறை குரு!" உணர்வில் செலுத்திடில், அந்த சொந்த, பந்த பாசத்தில், சிக்கிய மனமானது பாச உணர்ச்சிகளை விட்டுவிட்டு "அறிவாக!" அவஸ்யம் பிரகாசிக்கும். அந்த மெய் உணர்வான, அறிவே இறை சொரூபமாகும்! அந்த மெய் உணர்வான அறிவே, உன் உபாசனா மூர்த்தியாகிய "ஸ்ரீபகவான்" ஆகும்! அந்த மெய் உணர்வான அறிவே, உன் உள்ளிருந்து இயக்கி உன்னை வழிநடத்திச் செல்லும் ஸ்ரீ ஸத்குருதேவராகும்!!!



உ

அறிவு: "மனம்" வேறு "அறிவு" வேறல்ல! மனமே அறிவாக மாறிவிடுகிறது, எனமட்டும் உணரவேண்டும். காரணம் என்னவென்றால்? ஸ்ரீ மஹான்களின் வாசகம் எப்படி அமைகிறது என்றால்???

"ஒன்றே" பலவாகவும், "பலவானதே" ஒன்றாகவும்! முடிவில் ஒன்றும் "இல்லாததாகவும்!" ஆகும்! அதுவே நெய்வீக நிலையில், வேரானந்தமாகவும், பரமார்த்தீக நிலையில், பிரம்மானந்தமாகவும், வடிவெடுத்து; ஆனந்தமாக" விளையாடிவிட்டு, "சும்மாவே! சுகமாகவே!" இருக்கிறது என, அனுபவ ஞானிகள் கூறுவர்!

ஆனால்???

நாமரூப ஜகத் ஜீவ நிலையில் மட்டும் "மனதால்" [மனிதன்] மட்டும் பற்றப்பட்ட நிலையில் முக்குண தோஷங்களுக்கு ஆட்பட்டு; மறைமையான இன்பதுன்ப நுகர்ச்சிகளை நுகர்வது போல்நேர் பாவனையை காட்டுகிறது, என ஸ்ரீ மஹான்கள் அனுபவத்தில் சொல்வதுண்டு!



உ

இப்படியாக, ஸ்வயமாக அறிந்துணர்வதே "அறிவு" ஆகும்! இந்த அறிவை இறைநிலை என்றும், அதனினும் அதீத மானதை, "அகண்டபாவன"! யென்றும், ஸ்ரீ மஹான்கள் கூறுவர். அறிவை சாட்சி நிலை என்றும். அகண்டபாவனையை, சர்வசாட்சி நிலை என்றும், கூறுவாம். இங்கு வரிசைக் கிரமமாக சொல்வது என்றால்? மனமே அறிவு! அறிவே அகண்டபாவன என்று, நிலை கண்டு மாறும். ஒன்றினுள் ஒன்று, ஒடுங்கி கலந்து கரைந்து, மயமாகி, முடிவில் "ஒன்றும்" இல்லாததாகிவிடும்.

நாம ரூப குண பேதங்களை, கற்பனை செய்யும் இந்த மனமானது, அந்த நாம ரூப, கற்பனையென்பது ஜீவன் என்ற "ஆவரண"! மயக்கமே, என உணர்ந்து. அந்த ஆவரணமானது, "யோனி" என்ற, "இறைவனுக்கு"! அன்னியமில்லை யென்பதை உணர்ந்து விட்டால், "நாமரூப ஆவரண"! (நாமரூப) மயக்கம் ஒழிந்த தன்மையினால், அது இருப்பதையும், இல்லாது அழிவதையும், ஏற்படும் "விட்சேப" கலக்க பயம் என்னும் மயக்க போதை அகன்ற தன்மையினால், அந்த மனமே, அறிவாக பிரகாசிக்கும் என்பதே உண்மை!



"ஆவரண"/நாமரூப மயக்கம் உள்ளமட்டும்; பொன்னே, ஆவரணமாக உள்ளது என்று, தெரிந்தாலும், தெளிந்தாலும். பொன் என்று உரைக்காமல் (சொல்லாமல்) அதை ஆவரணமே என, "வாக்கு" புலம்பும் மட்டும்; ஆவரணமே ஸத்தியமாய் தோன்றும். பொன் மறைபொருளாய் இருக்கும். எந்த அளவுக்கு, பொன் தோற்றவிலையோ, அந்த அளவுக்கு, "மனமே" பிரகாசிக்கும்! ஆவரணம் மறைந்து, பொன் தோற்றி விட்டால், மனம் இயல்பாகவே மறைந்து, அங்கு "அறிவு" பிரகாசிக்கும். இந்த உவமானத்தினால், நாம் ஜீவனல்ல, நாம் இறைவனே என உண்மையாகவே உணர்ந்துவிட்டால், "நாமரூப" ஜகம், இருந்தாலும், அங்கு இறைவனைத்தான், நாம் உணர முடியும். இந்நிலை பெறுவதே அறிவு சொரூபமாகும். அந்த பொன் "இறைவன்" அது தோன்றிய, தாகிய, மண்ணுக்கு "பரசொரூபத்திற்கு" அன்னியமில்லை என, அறிவால் உணர்ந்த நிலை, அகண்ட பாவனையாகும்!



"நான் இன்னார்" என்பதே,
ஆவரணமயக்கமும். அதில் "குண
தோஷமும்!" பிணைக்கப்படு
வதால். சந்தேகம் கலக்கம் பயம் இவை
கற்பிக்கப்படுவதால், "விக்ஷேபம்!"
என்ற ஓர், "மயக்க, கலக்கமும்!"
தொடர்ந்து, இந்த மனதைப் பீடிக்கிறது! என உணர்க.

முடிந்த முடிவாக சொல்வதாவது:—
நாமரூப ஜகத்திற்கு, "இருப்புத்தன்மையும்!"
கொடுத்து, இது இன்னார் என்பதையும். இது இத்தகையது
என்ற, குணதோஷங்களையும், "கற்பனை" வழியில்
கொடுத்து, அவைகளையும் "ஆடவைத்து!"
தானும் "ஆடிக்கொண்டிருப்பதே!
மனதின் திறமையாகும்!
மேலே கூறியவைகளை, இல்லவே இல்லையென, "ஸ்திர
மாக" உணர்ந்து, அவை அனைத்தும் இறைவன் சிருஷ்டி
யான, "மண்ணே!" என உணர்வதே அறிவின் கூர்மையா
கும்.



உ

மனதின் திறமையிலும், அறிவின் கூர்மையிலும், முக்கியமாக, கவனிக்க வேண்டிய ஒன்று என்னவென்றால்:— இந்த "நாமரூப" "ஜகமானது" விவகார ஸத்தியமாக விளங்குவதால், "விகாரமே" "விவகாரமாக" விளங்கப்படுகிறது. அந்த விகாரமாகிய "மனம்", எப்படி வெளியாகிறதென்றால், பார்ப்பதிலும், கேட்பதிலும், அதுபற்றி பேசுவதாலும் தான், விவகரிக்கப் படுகிறது, என்பதே ஸத்தியம்! இதில் இந்த மாயாமனதின் "திறமையை" உணர்ந்து நம் "அறிவின் கூர்மையால்"! வெல்ல முடியும் என, அனுபவஞானிகள் கூறுவர்! எப்படி என்றால்? "பார்ப்பவன்"! பார்க்க வேண்டும்! "கேட்பவன்" (தட்டிக்) கேட்க வேண்டும்! இங்கு பார்ப்பவன், கற்பனையின் "மனம்" ஆகும்!

,, கேட்பவனும் கற்பனையின் ,, ,,



இதில் கூறிய, இருவரும் (பார்ப்பவனும், கேட்பவனும்) நம் "அறிவின்" வசமானால், இது சாத்தியமாகி, நம் மனம் "மௌனமாகி" "வாக்கு" அடங்கி, ஒடுங்கி மயமாகி விடும்! (வாக்கு என்ற ஒலியானது, அதாவது சப்தார்த்தமான வாயுவானது, ஆகாயம் என்ற யோகமாயாவில் ஒடுங்கிவிடும்) பார்ப்பவனைப் பார்க்க வேண்டும்: "நாமரூப" ஜகத்தை கற்பனைக் கண்களால், காண்பது மனம் ஆகும்! அதே நாமரூப ஜகத்தை, இயற்கையின் (இறைவனின்) நிலையில், "மண்" பதுமைகளாகவும்; "மண்ணாகவும்" (காண்பதல்ல) "உணர்வது" (கண்கள் அல்ல) "அறிவுக்கண்" ஆகும்! (இதுவே அறிவு)

ஒவ்வொரு க்ஷணமும், சற்று கவனமாக இருந்து கொண்டு, நாமரூபம் தோற்றினால் மண் தோற்றாது! எனவும், மண்ணை தோற்றினால் நாமரூபம் தோற்றாது, என்பதை உணர்ந்து, மனக்கற்பனைகளை, உடனுக்குடன்,



உ

கண்காணித்துக் கொண்டு, இந்த

சந்தேக மயக்கம்; கலக்க பயம்

என, (வராமல்) விழிப்புணர்வில், நம் அறிவானது

மனதைக் கண்காணிப்பதே, பார்ப்பவனை

பார்க்கும் நிலையாகும்! இதில் ஒவ்வொரு நிமிடமும்,

**"பழக்க, வழக்க"** நோய்களால்,

(பேச்சு) (செய்கை)

மனம் தடுமாறத்தான் செய்யும்! இருந்தாலும், நம் அறிவின்

கண்காணிப்பானது:— **"இறைகுரு"** உணர்வோடு,

எல்லாம் அவன் பொருள்! எல்லாம் அவன் செயல்! அவனன்றி

அணுவும் அசையாது! என்ற, **"தெய்வீக"** உணர்வில்

அறிவு நிலைத்து நின்றால் மனம் செயலற்று தானே அழிந்து

**"அறிவாகி"** விடும்! இதைப் போலவே!

கேட்பவனை (தட்டிக்) கேட்க வேண்டும்:— இங்கு

ஓர் உண்மை யென்னவென்றால்? காணும் கண்கள், ஓசைகளைக்

கேட்டாலும், அனர்த்தமே! அதேபோல், கேட்கும் காதுகளும்

நாமரூப காட்சிகளைக், கண்டாலும், அனர்த்தமே! ஒன்றுக்

கொன்று, சம்பந்தம் இல்லாமல், இயங்குவதனால்தான், இவ்

வுலக இயக்கம், எந்திரமாகவும், நித்தியமாகவும், தோன்றுகிறது.



உ

தானும் கண்ணே, கேட்கும் நிலை பெற்றாலும்,
கேட்கும் காதே பார்க்கும் நிலை பெற்றாலும்,
"பொய்யான" இவ் உலகம்,
"மெய்யாக" தோன்றமுடியாது!
அதனால் உலகமும், இல்லாமல் போய்விடும். அதை
இயக்கும், இறைவனுக்கும், வேலை இல்லாமல், போய் விடும்!
இங்கு நாம் காட்சிகளை, கண்கள் காண முடியும்! அதன் இயக்க
அசைவுகளை, (ஓசைகளை) கண்கள் கேட்க முடியாது! அதே
போல், இயக்க அசைவின் ஓசைகளை, காதுகள் கேட்க முடியும்
அது ஏனெனில், அசைகிறது என்று நாம் அசைவின் தன்மைகளை,
காதுகளால், பார்க்க முடியாது!
ஆனால் இவ்விரண்டு,
"நிகழ்ச்சிகளையும்! அறிவால் மட்டுமே உணர முடியும்.
"மனம்மௌனம்" ஆனால் மட்டுமே அறிவால் உணர முடியும்.
இங்கு "மனதின்" இயக்கம் இருந்தால், "அறிவால்"
இயக்க முடியாது. அறிவு மறை பொருளாய் இருக்கும்!
மனம் மறைந்து, அறிவு பிரகாசிக்கும் நிலையில்,
மனம் இல்லாமலேயே போய் விடும்! காரணம்?
"மனம்" அறிவோடு இரண்டறக் கலந்த நிலையில், அங்கு
மனம் என்ற நாமம் மறைந்து "அறிவு" ஒன்றே பிரகாசிக்கும்.
ஆகவே?



"மனம் அறிவாகும்"!
ஆனால் அறிவு மனம் ஆகாது! இதுவே உண்மை!
கேட்பவனை எப்படி (தட்டிக்) கேட்க
வேண்டும் என்கிறீர்? நாமரூப ஜகசொரூப
"ஓசைகளையும்" "வார்த்தைக
ளையும்"! அந்தந்த நாமரூபத்தை வைத்தே
கேட்டு! கிரகிக்கும் இந்த காதுகளை, அதனதன்
அர்த்த பாவனைகளை, அனர்த்தம்! என
ஆக்காமல், தெய்வீக நிலையில் "அர்த்தங்களை!
மாற்றிப் பார்க்கும் ஓர் நிலையும்; அல்லது மறக்க
முயற்சிக்கும் ஓர் நிலையும்; அல்லது அவைகளை
மன்னித்து விட்டுக்கொடுத்து நாம் வில
கிக் கொள்ளும் நிலையும்; அல்லது முடிவில்
"எல்லாம் நலமே"! என மௌனம் சாதிப்
பதும் இறைகுரு நாமாவில் தம்மை முழுமையாக,
அர்ப்பணிப்பதுவே "மனம்" என்றும் கற்பனையானவை
"அறிவு" என்ற மஹாபுருஷின், தட்டிக் கேட்கும்
நிலையாகும் என உணர்ந்த ஸ்ரீ ஞானிகள் சொல்வார்கள்.



உ

இறைவன் சிருஷ்டியில், மனம் படைத்த இந்த, மனிதனுக்கு மட்டும் "கண் காணும்!" ஆனால் கேளாது! பேசாது! "காது கேட்கும்!" ஆனால் காணாது! பேசாது! "வாய் பேசும்!" ஆனால் காணாது! கேட்காது! மேலே கூறிய, மூன்றும் இணைந்து, ஓர்மையும் ஸ்திரமும் கொண்டு "முக்தா நிலையும்" சமமாக, பேதம் இல்லாமல், செய்தால்: "உடல், உலகமும்! இல்லாமல் போய்விடும். "இறைவனுக்கும்! வேறில்லாமல் போய்விடும்!

இதை கவனிக்கவும்:— விஷம் உள்ள சர்ப்பத்திற்கு "கண்செவி" (பார்ப்பதும் கேட்பதும் கண்ணே)யாக, இருப்பதால், அதன் விஷத்தையும், கொடூர சீற்றத்தையும், அது விடாமல் இருக்கிறது. "ஓர் ஸாதுவான பசுவுக்கு!" காய்ந்த வைக்கோலையும் கழுநீரையும், புண்ணாக்கு, பருத்திவிதை, போன்ற "கழிவு" பொருளை போட்டாலும், அது சுத்தமான, புஷ்டியான, அபிஷேகத்திற்கு ஏற்றதான, "பால்" மட்டும் தருகிறது. அதன் கோமியமோ பவித்திரமானது.



உ

ஆறுவ் சர்ப்பமோ, குடம் குடமாக நாம் "பால்" கொடுத்தாலும் அது சுத்தமான கொடிய, விஷத்தையே கொடுக்கிறது. அதைத்தான், அது கொடுக்கமுடியும். அந்தன்மை போல்!

இறைவனால் தோன்றிய இந்த மனம் படைத்த மனிதன் மட்டும், "பார்ப்பது, கேட்பது, பேசுவது"! ஆகிய இம் மூன்றையும் பார்த்ததையும், கேட்டதையும், அப்படியே அது "உண்மை" யென நம்பி, பேசிவிடுவதாலேயே, அர்த்தம் அனர்த்தமாகி விடுகிறது. உதாரணமாக, சர்ப்பமானது, காண்பதையும் கேட்பதையும் உண்மையென நம்பி, செயல்படுவதாலேயே, அதன் "கொடியவிஷமும், சீற்றமும்"! அதைவிட்டு, விலகுவதில்லை. அதே போல், மனம் படைத்த மனிதனும், காண்பதையும், கேட்பதையும், அப்படியே உண்மை யென, வாக்கால்! செயல்படுவதாலேதான், "குணதோஷ" "விஷம்"! இவனை விட்டு, அகல்வதில்லை. அதனாலேயே, வினைப்பெருக்கமும், ஜனனமரண நெருக்கமும், இவனை விடுவதில்லை!

உ

# உடல் உலகம் அநித்யம்!



உடல் உலக நாமரூப பொருள்கள்,
அனைத்துமே அநித்தியமாயும்;
தோன்றி, இருந்து, மாறி, மறையக்கூடி
தாயும். அனைத்துமே அனைத்து ஜீவகோடிக
ளுக்கும், விகிதாச்சாரப்படி, பாரபக்ஷ
தோஷமில்லாமல், பகிர்ந்து கொடுக்கப்பட்டு, அனைத்து
"நாமரூப இயக்கங்களும்!" ஒழுங்காக
நடைபெறுவதால், ஸ்ரீ மஹான்கள் எப்படி அனுபவ
வாக்காக, சொல்கிறார்கள் என்றால்???

1. கொன்றன அனைத்தும், உன்னைக் கொன்றன என்றும்;
தின்றன அனைத்தும், உன்னையே தின்றன என்றும்; சொல்லுண்டு!

அதாவது?

நீ எதைக் கொன்றாயோ, அவை உன்னைக் கொல்கின்றன.
நீ எதைத் தின்றாயோ, அவை உன்னைத் தின்கின்றன.
எது உன்னைக் கொன்றதோ, அதையே நீ கொல்கின்றாய்.
எது உன்னைத் தின்றதோ, அவைகளையே நீ தின்கின்றாய்.
அல்லது இப்போது கொன்றதற்கும், தின்றதற்கும்,
பின் தொடர் வினையாக, இருந்து அவை ஓடிவரும்.
அதாவது கொடுக்கல், வாங்கல், என்ற "பற்று வரவு" தீர்க்கப்படுகிறதென்று உணர வேண்டும்!
நியமப்படி அவை
இப்பற்று வரவிலிருந்து நீக்கம் பெற்று, ஜீவன் முக்தி,
அடைய வேண்டுமானால், இறை உணர்வுடன், எல்லாம் உன்னால்.
எல்லாம் நீயே. எல்லாம் உன்னுடையதே. என மாற வேண்டும்.



உ

இப்படி மூன்று நிலைகளும், மாற்றி அமைக்கப்பட்டு விட்டால், "பந்த" வினை மட்டும் முடிவுறும். வேறு "எந்த" "சொந்த" வினையும் தொடராது!

உ. இஷ்டமுடன், எம் தலையில், இன்னபடி, என்று, எழுதிய, சிவனும், செத்து விட்டானோ???

மூட்ட மூட்ட, பஞ்சமே யானாலும், பாரம் அவனுக்கே, அன்னை நெஞ்சமே அஞ்சாதிரு!

அதாவது, முன் ஜன்ம வினைப்படி, "யாமாக"! இஷ்டப்பட்டு, கேட்டு வாங்கி வந்ததே, எம் தலையெழுத்தென, சொல்லப்படுகிறது. அந்த தலையெழுத்து, என்பது இன்பமோ துன்பமோ, "இந்த உடல்" அனுபவித்தே, ஆக வேண்டும்! அதை மாற்றவோ, மறுக்கவோ, விலக்கவோ, அந்த ஈசனாலும், முடியாது என்பதே நியதி! அப்படியானால், இந்த உடல், கருவிலிருந்து, வெளியில் வந்து, மண்ணில் மறையும் வரை, உணவு, உடை, இருப்பிடம், ஆகியவைகளை, "எம் வினை உடலுக்கு" எந்தெந்த காலங்களில், என்னென்ன கொடுக்க வேண்டுமோ, அதைக் கொடுக்கும், ஈசன் ஒருவன் இருக்கிறான். (அவன் சாகவில்லை) அவன் சாகமாட்டான்.



உ

அவன் இந்த, வினை உடலைக் காப்பாற்றுவான்; இத்தாவத்தின், "இரவல்" அன்னையே (தற்காவல அன்னையே) நீ பயம் இல்லாமல் செல் என, எம் ஒளவை சொல்கிறாள்.

3. உள்ளது தான் போகுமா? பின்பு இல்லாதது தான் வருமா? பள்ளத்தில் வெள்ளம் நிரப்பாதோ? பித்தனைப் போல், பிதற்றுகின்ற, பேதை மட நெஞ்சே, செத்து விட்டாளா இவள் ?????

அதாவது, உன் தாவ வினையின்படி, "உனக்கென்" கிடைப்பது, கிடைத்தே தீரும்! உன் தாவ வினை, சம்பந்தம் இல்லாதது, உன் அருகில், நீ எடுக்கும் நிலையில் இருந்தாலும், அவை உனக்குக், கிடைக்காமல் சென்று மறையும். உன் வினையின் படி, வருவதையும்; உன் வினை சம்பந்தம் இல்லாதது, உன்னை விட்டு விலகுவதையும், (மறைவதையும்) "இறை கருணை" என்றே, தலை வணங்கி, பணிந்து, ஏற்றுக் கொள்! இறை கருணை என்பது, ஓர் "கருணைப் பிரவாகம்" ஆகும்! (ஜலம் போன்று பாய்ந்து வரக்கூடியதாகும்) அங்கு உன் உள்ளம், "பள்ளம்" ஆனால், அது தானே நிரம்பும்! "மேடாக" இருந்தால், அது தடைப்படும்!!
,, ஆகவே, உள்ளத்தை, பள்ளம் ஆக்கிக் கொள்.



உ

பள்ளம் ஆக்குக:— அஹங்காரம், அதிகாரம், ஆதிக்கம், அபிமானம், இல்லாமலும்; உரிமையும், உடைமையும், பாராட்டாமலும், "எல்லாம் நலமே" என, பொறுமை, அன்பு, கருணை, சாந்தி, அமைதி, மௌனம் பூரண நிறைவுடன், "இறை குரு" நம்பிக்கையுடன் இருந்தவாகும்! அங்கு சந்தேகம், களங்கம், தயக்கம், பயம் இவைகளுடன், புலம்பம் அற்றிருப்பாயாக. உன் உடலையும் சிவன் சாகவில்லை. அவன் சாகமாட்டான். உன்னையும், ரக்ஷித்தே இருப்பான். (அது அவன் தனி விதி)

4. "வினை" விதைத்தவன், வினையை அறுக்க வேண்டும். (புசிக்க வேண்டும்)
"தினை" விதைத்தவன், தினையை அறுக்க வேண்டும். (புசிக்க வேண்டும்)
"நீ எதை" கொடுத்தாயோ, அதை வாங்க வேண்டும்.
,, ,, வாங்கினையோ, அதை கொடுக்க வேண்டும்.

அதாவது, இவ்வுலகில் இவ்வுடல் வந்ததோ, "பண்ட பரிவர்த்தனம்" பண்ண (பற்று வரவுக் கணக்கை, தீர்ப்பதற்கே) வந்த உடலாகும்! கணக்கு முடியாமல் உன் தாவம் மறையாது! கணக்கு முடிந்தால்



உ

உன் தாபம் நில்லாது. முன் பின், கணக்கு தெரியாததால், வீணே புலம்பாதே! அப்படி புலம்பினால், வினையும், ஜன்மாவும், அழியாது.

"மேலும் மேலும் பெருகும்!"

5. நன்மையும், தீமையும், பங்கயற்கோன் (இறைவன்) எழுதாதபடி, வருமோ என சலியாதிரு!

அதாவது, முன்ஜன்மாவின் வினையின்படி, புண்ணிய பாவமும் (நன்மையும் தீமையும்) இறைவன் எழுதுகிறான் என்பது, "உபசார" வசனமாகும். நாமே கேட்டு வாங்கினோம், என்பதே ஸத்தியமாகும்! வினை உடல் இயக்கத்தை எண்ணி கஷ்டம், கவலை, துக்கம், துயரம், கலக்கம், பயம், இவைகளை அடைந்து "பயம்" கொள்ளாதே! மேலே சொன்ன ஆறு நிலைகளிலும், நீ உன் மனதை ஆழ்த்தினால், "பயமே பலிக்கும்" என்பதாகிவிடும். அதற்கு நீயே! (உன் மனமே) பொறுப்பாகும். அங்கு எல்லாம் நீயே! என அவனைச் சரண்புகுந்து விட்டால்! அவசியம் வினையின் "கனம்" மாறும். பின்மனமும் உன் அனுபவத்தினால், ஆனந்தம் தானே உண்டாகும்!



உ

6. கேடுவரும்பின்னே! மதிகெட்டு வரும் முன்னே!
கெடுபவனே கேடுநினைப்பான்!
செய்வினை (செய்தவினை) செய்தவனுக்கே!
முற்பகல் செய்யின், பிற்பகல் விளையும்!

அதாவது ஒருவன் முற்பிறவியிலோ, இந்த ஜன்மாவிலோ, "பழவினையாக" இருந்தால் முடிவுறும்! "புதியவினையாக" இருந்தால் தொடர் வரும்! அவ்வினையின் "கடுமைக்கு" காரணம், இவன் "மன எண்ணமே"! அதாவது ஆகாமிய மனஎண்ண, அழுத்தம்தான், வினையின் "கடுமையும், கொடுமையும்"! தோற்று இறைவன்றி அம்மனதில், இறைகுரு நம்பிக்கையுடன், சர்வார்ப்பணம் இருந்தால், அது ஆகாமியமும் ஆகாது! கடுமை கொடுமையாகவும் தோற்றாது. வரும் வினையின், அழுத்தத்தினால், மனம் கெட்டுப் போகும் என, சொல்வதை விட அவ்வினையை நாமே வலுவில் ஏற்கும்! ஒருவரால் ஒருவருக்கு, எந்த நல்வினையோ, தீவினையோ, கொடுக்கவும் (செய்யவும்) முடியாது. பிறரிடம் இருந்து வாங்கவும் முடியாது. அவரவர் வினைகளை, அனுபவித்தே தீர்க்கவேண்டும்! அவரவர் வினைகளுக்கு, அவரவரே பொறுப்பு! வேறு எவரும் பொறுப்பாக முடியாது.



உ

ஆனால் ஒன்று! ஸ்ரீமஹான்கள் சொல்வது, "பழிபாபம்" இரண்டும், ஒன்றுடன் ஒன்று இணைந்ததாகும். பழி என்றால் சொல்! பாபம் என்றால் செயல் ஆகும்.

ஆத்திரம், அவசரம், வேகம், கோபதாபம், படபடப்பு, விரோத குரோதம், வஞ்சகம் சூழ்ச்சி, போட்டி பொறாமை முதலிய, "விரோத குரோத" குணங்களால், ஒருவரை ஒருவர், "நிஷ்டூரமாக" வாக்கால் பேசி தாக்கும் "கொடூரவாக்கானது" "எறியந்து" போல், எறிந்தவரையே திரும்ப தாக்கும்.

ஸ்ரீமஹான்களிடம், நேரும் முற்காலங்களில் வெல்லாம், அஸம்பாவிதமாக நடந்து கொண்டால், அந்த ஸ்ரீமஹான் தனின் வாக்கு, "சாபமாக" மாறும், எனச் சொல்வதுண்டு. ஆனால் இக்கலியில், இந்த ஜீவர்களோ, தங்கள் அறியாமையில், ஒருவருக்கொருவர், "வாக்கால்" சுட்டுக் கொள்கின்றனர். அதுவே சாபமாகமாறிவிடுகிறது.

இதில் ஓர் உண்மை யென்ன வென்றால்?



உ

"வின்" இல்லாமல் வாக்குவராதுதான்!

அங்கு "கடும், சுடும்" வாக்கு

வரும்போது. பேசுபவர் வாக்கானது,

எதிராளி அவ்வாக்குக்கு உரிய வினை

செய்திருப்பாராயின், அந்த எதிராளியை, அவ்வாக்கு

"சாபமாய்" மாறிப்பிடிக்கும். இதை "செய்வின்"

எனச் சொல்லலாம். அவன் செய்த வினையே, அவன் எவனுக்கு

செய்தானோ, அவன் வாக்கு மூலமாக, இவனைத் தாக்கி, அது

சாபமாக முடிவுறுகிறது!

அந்த கடும் வார்த்தை, பேசுபவன் வாக்கானது, அந்த வாக்கு

எதிராளி அவ்வினைக்கு, சம்பந்தம் இல்லாதிருப்பாராயின்,

எறிபந்து போல, திரும்பவும், எறிந்தவனையே தாக்கும். இங்கு

"அவன்" வாக்கே அவனுக்கே "சாபமாக"

மாறி "செய்வின்" என்ற நிலையில் பலன் தரும்.

ஆகவே "பழிச்சொல்லே". "பாபச்

செயலாய் மாறி" அது உலக நியதியில்

"செய்தவினை செய்தவருக்கே"!

என்ற நியதியில், (செய்வினையாக) மாறி விடுகிறது.

ஆகவே உலகில் செய்வினையும் இல்லை! செய்பவனும் இல்லை!!

அவரவர் வாக்கே, வினையாக மாறி, அதுவே சாபமாக மாறி

செய்தவினையே, அவ்வினை தாக்கும் போது, அந்த மனிதன்,



உ

நாம் என்ன பேசுகிறோம்? நாம் என்ன
செய்கிறோம்? என்பதையே அறிய
முடியாமல், தன் கோபா வேஷமே
நான் என உணர முடியாமல், யாரோ எனக்கு,
செய்வினை செய்து விட்டார்களோ என,
அல்லலுறுகின்றனர்.
"முற்பகல் செய்யின், பிற்பகல் விளையும்", என்பதும், "முன்
பின்" அறியாததே காரணமாகிறது.
ஒன்று முன்வினையே, காரணமாக அமையலாம்!
அல்லது பின் வினைக்கு, வித்திடலாம்!
இவ்விரு வினைகளுக்கும், "நான்! என்னை!
என்னுடையது!" என்ற, தற்காப்பு சக்தி
யுடன், அஹங்கார, அதிகார, அபிமானத்துடன் செய்யாமல்
"எல்லாம் நீயே! எல்லாம் உன்னை!
எல்லாம் உன்னுடையதே!
என்ற "தற்கவன சக்தி"யுடன்,
ஸ்ரத்தையுடனும், நம்பிக்கையுடனும், உடல்
உலக பொருள்கள், நாமரூபம் அனைத்தும்,
பொய்யென்று, வைராக்கியத்துடனும் இருந்தால்,



"முன்வினை, பின்வினை" ஆகிய இவ்விரண்டும்; அழியாது!!
ஆனால் "மெழுகுமறைந்து" போகும்
இது பிரமாண உண்மையாகும்!

இந்த வைத்தியம், எல்லா மடல்களிலும், ஒவ்வொரு உபதேச கருத்துக்களிலும், "நான்" ஒழிந்து, "நாம்" ஆகவேண்டும் எனவே என் சர்வ சுதா(வும்) சொல் திறம் என்றால்? உடல் உலக, நாம ரூப பொருள்கள் அனைத்துமே, ஸ்ரீ பகவானுடையதாக இருப்பதாலும், நாம் இப்புண்ணிய பாப உடல் (சார்ந்த), அப்புண்ணிய பாபத்தை அனுபவித்து, இங்கேயே போட்டு விட வந்தோமே தவிர, திரும்பவும் ஜன்மா எடுக்க வரவில்லை, என்பதே ஸத்தியம்! இவ்வுடலும், அதைச் சார்ந்த வினைகளும், அஹங்கார, அதிகார, ஆதிக்க, அபிமான, உடைமை, உரிமையால், வந்தவைகளாகும். இவை நான் என்ற, "தனிமையில்" விளைந்ததாகும். இவை மாறி, நாம் என்ற "பன்மையாக"!



உ

மாற்றிக் கொண்டால், ஸ்ரீபகவானையும் "நம்மோடு" இணைத்துக் கொள் திரேம் என பொருள் கொள்க! நம்முடன் ஸ்ரீபகவானையும், இணைத்துக் கொள்வதால் "நாம் அறிந்தோ", "அறியாமலோ" இந்த நொடி வரை, செய்த அனைத்து புண்ணிய பாப "கர்மாக்களையும்" ஸ்ரீபகவான் ஏற்றே ஆகவேண்டும்! "அது அவன் கடமை" (இல்லை இல்லை அவன் தலைவிதி) ஆகும்! இவ்வுலக நாம ரூப பொருள்களும், அதன் மயக்கங்களும், நம் வாக்கால் பேசு பந்தப்பட்ட அனைத்து காரியங்களையும், "எல்லாம் நீயே" என சர்வார்ப்பணமாக விட்ட, "மறுகணமே"! பொறுப்பனைத்தும் அவனுடையதாகிவிடுவது மேலும் பன்மையாகி, வாக்குமாறி வரும்போது, "ம்" என முடிவுறும். அது "ஓ" என்ற யோகமாயாவாகும். அதில் எந்த கர்மாவும், ஒட்ட முடியாது! ஒட்டக் கூடாது! யோக மாயா, கர்மா சம்பந்தம் அறும். யோகமாயா கர்மா நிவர்த்தியாகும்.



ஆகவே காண்பதிலும் கேட்பதிலும் "அதிசிரத்தையாக"! இருக்கவும். அதே நேரம் "வாக்கை" குறைக்கவும்! நிறுத்த முடியாது. வாக்கு வரவில்லையானால், கர்மா முடிவுறுது. கர்மா முடியவேண்டுமே தவிர, கர்மா தொடரக்கூடாது. ஆகவே?

"குறைவாக" பேசு. "இறைகுரு" நம்பிக்கையுடன் பேசு. "இதமாக" இனிமையுடன் பேசு. வாக்காலும், செயலாலும், எவரையும், (மனதை) புண்படுத்திவிடாதே! பிறர் அவ்வாறு செய்தாலும், அதை கண்டுகொள்ளாதே. "எல்லாம் அவனே"! என அடங்கி இரு. அடக்க எண்ணாதே!

எல்லாம் நலமே என எண்ணு! அவசியம் உன் அனுபவத்தில், எல்லாம் "நலமாகவே"! மாறிவிடும். இது இப்பைத்தியத்தின், ஸ்வய அனுபவமாகும்! எல்லாம் ஒன்றே! அதுநலமே! அதுயாமே! அதுநீயே! இது ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!!

பாபா



உ

"இல்லை, இல்லை! அவன் தலைவிதி"!!!

மேலே கூறிய, இந்த கடுமையான, வாசகத்தைப் போட்டதற்கு, இந்த ஏழை பைத்தியத்தை மன்னிக்க வேணுமென்று, உங்கள் அனைவரின், பொற்பாதங்களிலும், பணிந்து வேண்டுகிறேன்!

"இறைவன் ஒருவனே"! இருவர் அல்ல.

ஆனாலும் முன்பே சொன்னேம்:- "விதி" க்கடவுளாகிய, "காலதேவன்!" ஒருவன் என்றும்; கருணை கடவுளாகிய, "ஸ்ரீபகவான்!" ஒருவன் என்றும்; இருவரைச்சுட்டிக்காட்டி, "தொழில்" நிமித்தமாக இருநாமாக்களை கொடுத்தோம்! ஆனால் ஒருவனே!!!!!

இங்கு "நான்" என்பது மாறி, அது "நாம்" என ஆகும் போது, ஸ்ரீபகவானையும் நம்மோடு, இணைத்துக்கொள்வதால், நாம் அறிந்தோ, அறியாமலோ, செய்த புண்ணிய பாவ கர்மாக்களை, அவன் வாங்கியே தீரவேண்டுமென்பது, அவன் "கடமை" என்றோம். காரணம்?

நாமரூப ஜகம் அனைத்தும், அவனுடையதே! அவன் நமக்காக, விளையாடக்கொடுத்தானேயன்றி, "உடைமையும்" அஹங்காரமும்!



"உரிமையும்"! "ஆதிக்கமும்"! "அதிகாரமும்"! செலுத்தி, சொந்தம் கொண்டாட, கொடுக்கவே இல்லை!

நாம் இப்படிச் செய்தது "மடமை" ஆகும்!

ஸ்வயம் பிரகாசமாகிய, ஆத்மாவாகிய நம்மை, ஓர் "ஜீவன்"! என நாமம் கொடுத்து, பந்தத்தைக் கொடுத்தது இந்த "மாயா மனம்"! ஆகும். இந்த மாயா மனமோ, ஸ்ரீ பகவானுடைய, மாயையின் மைந்தனாகும்! இம்மனதின் எண்ணமாகிய, "நான்"! என்ற அகங்காரத்தால், பந்தப்பட்ட ஜீவன் என ஆனோம்!

இந்த மன எண்ணமானது, சாட்சி பாவனையால் "அறிவாக" மாறி (மனமே அறிவு! அறிவே ஆத்மா) அந்த மெய் உணர்வினால் "நாம்"! என்ற இறை நிலையை எட்டியதால், அகங்காரம் அழிந்து அங்கு "ஆனந்தம்" ஒன்றே நிலவியது! இங்கு இந்த ஜீவ போர்வை, அகன்ற நிலை, ஸ்ரீ கருணைக்கடவுளான ஸ்ரீ பகவானையே சாரும். அப்படிப்பட்ட ஸ்ரீ பகவானையும், அவன்



உ

கருணையான காரியத்தையும், "அவன் தலைவிதி" எனச் சொல்வது, அதிக கடினமான வாசகமே! அதை இந்த பைத்தியம், சொல்வதில் தோஷமில்லை. ஆனாலும் உங்களிடம், மன்னிப்பு கோரிக் கொள்கிறேன்! நீங்கள் சொல்லவேண்டாம்!

இந்த விநாடி வரை, செய்த அனைத்து புண்ணிய பாவ கர்மாக்களை, "எல்லாம் நீயே" என சர்வார்ப்பணத்தினால், விட்ட நிலையில், அவன் எப்படி ஏற்றுக் கொள்கிறான் என்றால்? "நாமரூப ஜகவிளையாட்டு! போதும் என, நிறைவு கொண்ட" பக்குவ ஆன்மாக்களிடம் மட்டும், அவன் ஏற்றுக் கொள்கிறான். மற்றும் ஏனையோர், விளையாட்டில் மிக மிக ஆர்வமாகவே இருப்பதால், அவர்களும் ஆனந்தமாகவே விளையாடட்டும் என, தானும் ஆர்வமாக, அச் ஜீவர்களுக்கு, நிலை கண்டு, (வினை கண்டு) பக்குவம் உணர்ந்து, (மனம் அறிந்து) "ஆசையினால் தேவைகள்," கொடுத்து, "தேவையினால் ஆசைகள்" வளர்த்து, இவ்விரண்டினால், "போக போக்கியங்கள்" அள்ளி அள்ளி கொடுத்து, தானும் குழந்தையோடு குழந்தையாக, விளையாடிக் கொண்டிருக்கிறான். நன்றாக விளையாடட்டும்!

அந்த விளையாட்டு, எம்மை நம்பும், உங்களுக்கும் எமக்கும் வேண்டாம் என, நிறைவு செய்கிறோம்!

பாபா.

எல்லாம் ஒன்றே! அது யாமே! அது நீங்களே! அநித்யம்!



ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

"ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்"!

# "ஸ்ரீஸத் குரு திருவடி துணை"!

# "நம்பினோர் கெடுவதில்லை"!

# "அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம்",

# "அகமே எல்லாம்!"

# "ஜெகத்பரமும், ஜீவர்களும்";

# "ஏதும் இல்லை"!

# "ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெய ராம்",

# "ஓம்"

"சங்கல்பமே உலகம்", சங்கல்ப ரஹிதமே மோக்ஷம்!
விவஹாரஸத்தியமே உலகம்!
"எண்ணினால் ஜனனம்! மறந்தால் ஒன்றும் இல்லை"!



# "கருணை"!

"கருணை" என்றால் இறைவன்!

"இறைவன்" என்றால் கருணை!

இறைவனுக்கு, வேறு எந்த, வார்த்தைகளும் போட முடியாது! போடக்கூடாது!! போடத்தகாது!!!

கண்டிப்போ, தண்டிப்போ, அவனிடம் கிடையாது! ஆனால் "கண்காணிப்பு" (சாட்சிபாவனை) மட்டும் உண்டு என, ஸ்ரீ மஹான்களின் அனுபவவாசகம் கூறுகிறது. நாம் எந்த நாமரூபத்தை "கற்பனை" வடிவில் கொடுத்தாலும், அவன் அதைக், கருணையுடன் ஏற்றுக் கொள்கிறான். காரணம் என்னவென்றால்? செயல்பட முடியாத, "பரசொரூபமே"! செயல்படும் நிமித்தமாக, "இறை" சொரூபமாக வருவதால், இக்கலியுகத்தில், அச்சீவர்களுக்காக, (பிரதானமாக) மனம்படைத்த மனிதனுக்காக மட்டும், அவன் மனம் எதை ஏற்றுக் கொள்கிறதோ, அந்த வடிவத்தைத் தாங்கி "ஸ்ரீபகவானாக" வருகிறது!



உ

இங்கு ஸத்வகுணம் (ஸாந்தி சொரூபம்) ஒன்றே, ஸ்ரீ பகவானுக்குப் பொருந்தும். மற்றும் எந்த "ரஜோ. தமோ" (கோர குணங்கள்) இருந்தாலும், அவைகள், ஸ்ரீ பகவானுக்குப் பொருந்தாது. மற்றும் கோர குணங்கள் இருந்தால், அவைகள் தேவதைகள் (தேவர்கள்) என்ற நிலையில், "காவல்" தெய்வங்களாகும்!

ஸ்ரீபகவான், ஏன் ஸாந்தி சொரூபமாக இருந்துகொண்டு கண்டிப்பு தண்டிப்பு இல்லாமல் "ஸத்வகுண" சம்பன்னராக இருக்கிறான் என்றால்? ஓர் ஜீவன், பக்குவ நிலை பெற்று, சாட்சியாக (இறைவனை) ஆக்கிக் கொண்டு, பின் சர்வசாட்சி (அகண்டபாவனையாக) ஆவான், அவன் "ஜீவன்முக்தன்!" என்ற, பிறவா நிலை பெறமுடியும் என்ற, "கருணையின்" வாத்ஸல்யத்தாலேயே, அவ்வாறு இயங்குகிறது. சாட்சி பாவனை என்றுவே "ஸமத்வம்" (பேதமற்ற நிலை) எனப்பொருள் படும். ஏற்றதாழ்வுகள் மனதுக்கு பொருந்தும். ஸமத்வம் அறிவு என்ற ஸ்ரீ பகவானுக்குப் பொருந்தும்!

ஆகவே கருணை என்ற ஸ்ரீ பகவான் நிலை பெற்றால் தான், ஜீவன் முக்தி நிலை, பெறமுடியும் இது ஸத்தியம்.



இக் "கருணை" நிலைக்கு ஓர் விளக்கம்: பிரமாணமாக சொல்கிறோம் :- அதாவது ஸ்ரீபகவான், இக் கலியுக தோஷங்களிலிருந்து, "அன்பர்கள் தம்" வசம் ஈர்ப்பதற்காக, ஒவ்வொரு இல்லங்கள் தோறும், தினமும், "வாசலில்" காத்து நிற்கிறான்!

உங்கள் குடும்பத்திலுள்ள, எவராவது, "ஒருவர்" ஆகிலும், நம்மை "உள்ளம் உருகி!" அழைக்கமாட்டார்களா என, "ஏக்கத்துடன்" காத்து நிற்கிறான் எம்பிரபு! அழைத்தால் வீட்டிற்கு உடனே வந்து விடுவான்!

ஒருவராவது அவனை ஏறிட்டுப் பார்ப்பதும் இல்லை!

"ஹே பிரபோ (கண்ணா)" நீ ஒருவன், வந்தால் போதும் என, அவனை அழைப்பாரும் இல்லை!

இது இல்லை! அது இல்லை! இது வேண்டும்! அது வேண்டுமென, உங்கள் வினையின், "அபிலாஷைகளை"! மட்டும், தேடி, நாடி, ஓடி அங்காடி நாய்போல் (தெரு நாய்போல்) வீணாக அலைந்து, அலைந்து, காவோய்ந்து போய், "அக்கடா" (அப்பாடா) என சோர்ந்து விழுந்து விடுகிறீர்களே!



உ

இது நியாயமா? அவனை மனம் உருகி, கண்ணீர் பெருகி, அழைத்தால் அவன் வீட்டினுள் வந்தால், அனைத்து **சங்கடங்களும்!** நீங்கிவிடுமே?

நீங்கள் கேட்கலாம்:- வீட்டு வாசலில் நிற்கும் ஸ்ரீ பகவான், வீட்டிற்குள், ஏன் வரலாகாது? அவன் வீடுதானே? அவன் குழந்தைகள் தானே? அவன் பொருள்கள் தானே?

யாம் சொல்கிறோம்:- ஸ்ரீ பகவானின் தன்மை என்னவென்றால்?

**“நீ அழைக்காமல்”** அவன் வரமாட்டான்! அவன் வர முடியாது! அவன் வரக்கூடாது!

**“நீ கொடுக்காமல்”** அவன் எடுக்க முடியாது! எடுக்கக்கூடாது! எடுக்கமாட்டான்!

**“அவனுடைய”** பொருள்களை, **“எனதாக”** பாவனை பண்ணி, **“நான்! என்றல்! என்னுடையது!”** எனவுரிமையும், உடைமையும் பாராட்டி, **“தோஷம்”** உள்ளவர்களால், அப்பொருள்களை **“உனதாக்கிக்** கொண்டதால், அந்தோஷம் நீங்க, நீயே மனமுவந்து,



மனம் கனிந்து, எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே எனச் சர்வார்ப்பணமாக கொடுக்காமல்,

"அவன் வரவும் மாட்டான்! "அவன் எடுக்கவும் மாட்டான்!

பக்தன் கொடுக்காமல், ஸ்ரீபகவான் வாங்க முடியாது! வாங்கக் கூடாது! பக்தன் அழைக்காமல் ஸ்ரீபகவான் வர முடியாது! வரவும் கூடாது!

"இதுவே நியதி!!!"

ஓர் உண்மை என்னவென்றால்? எம்பிரபு உங்களுக்காக, காத்து நிற்பதில், சோர்ந்து போக மாட்டான். எப்படியும் நம்மை, அழைப்பான் என்ற, "நம்பிக்கை! அவனிடம் இருக்கிறது! (எப்படியும் நீ அழைத்தே தீர வேண்டும். ஓர் நாளில்)

"சந்தேகப் பிராணி நீ ஏனோ!

லௌகீகமோ? தெய்வீகமோ? அனைத்திலும் சந்தேகம்? சந்தேகம்? சந்தேகம்? சந்தேகம்? சந்தேகம்? உன் "சந்தேகங்கள் உடைத்தெறிந்த மறுகணம், உன்னிடம் வந்தும் விடுவான்! அனைத்தையும் பூர்த்தியும் செய்வான்.



உ

ஓர் காட்சியை எமதய்யன் திருடன், **(கண்ணன்)** காட்டி அருளினன். எமதண்ணலும் வில்லாளி வீரன் விஜயனும், ஏதோ ஓர் காரியமாக, வான வீதியில் புஷ்பக விமானத்தில், சென்று கொண்டிருந்தார்கள். ஓர் இடத்தில், ஓர் கடல் போன்ற ஓர் நீர்ப்பரப்பு. அப் படகு
நீளே கண்டனர். உல்லாச பயணம் செய்தவர், ஜலத்தில் தத்தளித்
உடைந்து, ஆழ்ந்து போன தன்மையினால், அவதியுற்றனர்.
துக் கொண்டு, கரையேற ஓர் துறை காணாமல்,

அதை கண்ணுற்ற விஜயன் சொல்லுவான்:- ஹே கமலக்கண்ணா! இதோ பார், உயிருக்காக மன்றாடும், ஜீவர்களை காப்பாற்றுவோமா வா?

கண்ணன்:- (கடும்) **"ஆசையே அவஸ்தை!**
**"போஹ மோஹத்தில்** சிக்கிய
அவர்களுக்கு, **உபகாரமும் அபகாரமாய்!**
முடிவுறும் நிலையில் அவர்கள் இருக்கிறார்கள்!
அவர்கள் **விதியும், மனமும்** அவ்வாறாக
இருக்கிறது. ஆகவே அவ்விரண்டையும் சாதகமாக பயன் படுத்தி
கொண்டு **"விதி தேவன்"** தன் காரியத்தை,
ஒழுங்காக செய்து கொண்டிருக்கிறான். ஆகவே நாம், அங்கு
செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

காண்டீபன்:- ஓகோ! நீ எல்லாம் உணர்ந்தவனே! ஆனாலும் நீ
சொல்லும், வினை மனம் விதி இவைகளின் செயல்பாடு, என்ன
தான் இருந்தாலும், விதியை மதியால் வெல்லலாம். என்ற



உ

வாசகப்படி, நாம் படகு ஒன்றை, தொண்டு சென்று, "நம்மை நம்பி"னோம், ஜீவர்களை கரை சேர்க்கவாமே! முயற்சி திருவினையாக்கும்; என்ற ஸூக்தியவாக்கு, அவர்களை நம்பச்செய்து, கரையேற்றி விடாதா?

கண்ணன்:- (கலகலகலகல வெனச்சிரித்தான்) விதிமுடிந்த ஜீவர்களுக்கு விதியை மாற்றச் சொல்கிறாயா?

காண்டீபன்:- அந்த விதியை எழுதியவனே நீதானே? பின் ஏன் இப்படி இக்கட்டான சூழ்நிலையில், அதை மாற்றி வேறு இடத்தில் அதை முடிக்கவாமே? நாம் காணும் நிலையில் அவை நடைபெறவேண்டாமே

கண்ணன்:- எது எது? எங்கெங்கே? எப்படி எப்படி? முடியவேண்டுமோ? அது அது! அங்கங்கே! அப்படி அப்படி! முடிந்தே ஆகும்! "ஒரு அன்பில்" திளைத்த பக்குவ ஆன்மாக்களுக்கு, "சூட்சுக்" காட்டிய மறுகணம், "புரிந்துக்" கொள்வர். மோகபோதையில் மயங்கிய ஆன்மாக்களுக்கு, எத்தனை எளிதாக சூட்சுக் காட்டினாலும், அது "நீர்மேல் எழுத்து"க்கு ஒப்பாகும்! மோகத்தில் சிக்கியவர்கள் காலன் பிடியில் சிக்கிக் கொள்வர்

காண்டீபன்:- ஹே கண்ணா! நீ ஒரு வஞ்சகக்காரன்

(ஒருதலைப்பக்ஷ மாணவன்)



உ

ஆகவேதான் உன் பக்தனிடம், அளவற்ற "கருணை" காட்டுகிறாய்! அறியாத, அறிவில்லாத ஓர், பாமரனிடம், கருணை காட்டோம் என்கிறாய்? உன் பிடிவாதம் சரியில்லை! அவர்கள் விதி முடிந்தவர்களா? விதி முடியாதவர்களா? என்பது நாம் "முயற்சி" செய்து பார்த்தபின், முடிவு செய்ய வேண்டிய ஒன்றாகும்! ஜலத்தில் மூழ்கி, உயிருக்காக போராடும் ஒருவனிடம் ஓர் "படகை காட்டி"! இதில் ஏறிக் கொள், மகனே என, அன்போடு அழைத்தால், எவன்தான் மறுப்பான்? அவனும் நம்மை நம்பும், ஜீவர்களை, கரையேற்றி விடவாம் என, கூறி விட்டு இருவரும், ஓர் படகுடனே, உயிருக்காக போராடும், ஓர் ஜீவனிடம் வந்து, கண்ணனும் காண்டீபனும், தம் இருகரம் நீட்டிக் கொண்டு :- ஐயா! பயம் வேண்டாம்! இப்படகில் ஏறிக் கொள். உன்னை பத்திரமாய், கரை சேர்த்து விடுகிறோம் என்றார்கள்.

அச்ஜீவனின் நிலை :- ஜலத்தில் சிக்கிய நிலையில், "ஐயா!" என்றோ; "அப்பா!" என்றோ. வாய் துவாரத்திலும், மூக்கு துவாரத்திலும், ஜலம்தான் போகுமே தவிர, நீக்குப் போக்கில்லை! (அந்நேரம்)



அவனோர் "மரண அவஸ்தை" அரும்! அந்நிலையில், கண்ணனும் தாண்டவனும், இணைந்த நிலையில், "நான்கு" அபய கரங்களையும் நீட்டுகிறார்கள்!

அவஸ்தைப்படுபவன் "பயந்த நிலையில்" தம் "பயகரத்தை"! மேலே உயர்த்தினான். "ஆறுதலுக்காக"! ஆறு கரங்களும், சந்திக்கும் வேளையில், ஓர் "பொன்" மூட்டை ஒன்று, அப்படியே ஜவத்தில் மிதந்து வந்தது. மரண அவஸ்தையோடு போராடும் அச்ஜீவன், தன்னைக் "காக்க வந்த"! கடவுளர்களையும் காண்கிறான். "காலனை" வந்த "காசையும்"! காண்கிறான்.

(காசே தான் கடவுளடா! அந்த கடவுளுக்கும் இது தெரியுமடா!) என்ற நிலையிலுள்ள, இன்றைய கலியுக ஸ்ரீமஹான்களின் வாக்குப்படி, அச்ஜீவன் ஓர் கணக்கு போடுகிறான். எப்படி என்றால்?



நம்மை தாக்கப் போகும், அவ்விருவர் கைகளிலும் ஒன்றுமில்லை! நாம் ஏறப்போகும், அப்படகினிலும் ஒன்றுமில்லை! ஆனால், இப்பணமோ, ஓர் படகுபோன்று நம்மை கரை ஏற்றும் ஓடமாக, மிதந்து வருகிறது. இப் "பணப்படகை"! பற்றிச் சென்று, கரையேறிக் கொண்டோமானால், உலகம் புகழும் வண்ணம், "கோடீஸ்வரனாக"! வாழ்வாமென, மனக் கோட்டை கட்டினான். பணத்தை நம்பினான்! பகவானை மறந்தான்! மண் குதிரையை நம்பி, ஆற்றில் இறங்கிய கதையானான்

காண்டீபன் திகைத்தான். எம் கண்ணன் சிரித்தான்! நம் காண்டீபன், ஓர் ஜீவனவன், கடவுளே! நான் சாகப் போகிறேனே? என்னைக் காப்பவர், யாருமில்லையா? என அலறியபடியே திக்குமுக்காடிக் கொண்டு, நீந்தவும் சக்தியற்றவனாய், தன் "சக்தி" முழுவதும் இழந்து, மரணவஸ்தையோடு, போராடும் ஜீவனைக் கண்டான். அவனைக் காப்பாற்றலாம் என, காண்டீபன் வேண்ட, எம் கண்ணனும், சிரக்கம்பம் அசைத்த வண்ணம், "ஊம்"! என்றான்.



உ

அவனருகே, கண்ணனும் காண்டீபனும், படகை கொண்டு நிறுத்தினர். அந்த ஜீவனும் படகையும், அவ்விருவரையும், ஆவலுடன் நோக்கிய வண்ணம், இனி நாம் "பிழைத்துக்" கொண்டோம். என்ற ஆசையுடன் ஐயா! ஐயா! ஐயா! தூக்கு ஐயா! நீங்க நல்லா இருக்கணும். என்று புகழ் துதி பாடிய வண்ணம், "ஆறு கரங்களும்!" இணையும் நேரம்.

ஓர் அழகிய மாது, அவளும் உயிருக்குப் போராடிய நிலையில்; அவன் அருகே கண்டான்! அந்த "பெண் மோகத்தில்!" புத்துணர்ச்சி (காம வெறிற உணர்ச்சி "ம்மையபிராந்தி" மயக்கத்தினால், அவ்விருவரையும், அப்படகையும் நம்பி சென்றால், "கரைசேரலாம்!" ஆனால் "கரைகாணா இன்பம்!" நம்மை சேராதே. இந்த அழகான மாது பிரோன் மணியே நமக்கு போதும்! பகவானும் (கரை யேற்றுபவனும்) வேண்டாம்! அந்த படகும் வேண்டாம். இந்த பாவையே நமக்கு போதும்.



உ

என
அந்த பெண்பாவையைப், பற்றி கரை ஏறிய
வன் கதை:- ஓர் “முதலை”
அதன் மேல்
நம்பி, ஏறி, கரை ஏற முயன்றவன் கதை
எப்படியோ, அப்படி முடிவுற்றது!

இக்கதையிலிருந்து நீங்கள் உணர்வதாவது:-
முன் கதையில் சொன்னபடி, ஸ்ரீ பகவான் உங்கள் முன்
“ப்ரத்யக்ஷமாய்!” நிற்கிறான்.
ஆனாலும், உங்கள் ஜகவாச தோஷ பழக்கமானது,
“காம, காஞ்சன” (பெண், பணம்)
ஆசையானது, உங்கள் “மனதை” விடேன்
என்கிறதே என் செய்வோம்? என்கிறீர்கள்.
உங்கள் மனமானது, மனைவியை “குடும்பத்தை!”
“நான்” விட்டுவிட்டால்!
“என் கதி என்ன! அவள்” (குடும்ப)
கதி என்ன?” “பணம்” (உயிர்கொல்லி)
இல்லாமல் நான் வாழ முடியுமா? பணம் தேடாமல்
வாழ்க்கை இல்லையே? என் மனைவியை (குடும்பத்தை)



"நான்" காப்பாற்றாமல் வேறு யார் காப்பாற்றுவார்கள்?

"ஊர்", "உலகம்", "உறவு", "சுற்றம்", "நட்பு"!

தூற்றுமே! பழிக்குமே! பகைக்குமே! நம்மை வாழவிடாமல் என்னென்ன செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்யுமே என "சந்தேகத்தால்" கவலை, பயம், துக்கம், சஞ்சலம் இவைகள் "பேய்மனதை" ஆட்டு ஆட்டு என்று ஆட்டுகிறதே என் செய்வோம்??? என எண்ணத் தோணுதா? அப்பயந்த எண்ணமே பலிதமாகும்! பயம் வேண்டாம்!

"நிர்கதி" உண்டானால் "அந்த" விநாடியே "ஸத்கதி" உண்டு என்பதே பிரமாண உண்மையாகும்.

இது இந்த ஏழை வைத்தியத்தின் ஸ்வய அனுபவமாகும்!

இங்குதான் "நம்பினோர்கெடுவதில்லை" என்பது ஸத்தியமாய் பிரகாசிக்கும்!



உ

ஓம் அன்பான குழந்தைகளே!
யாம் உங்களை பணம் தேட வேண்டாம்
என்றோ, மனைவியை (குடும்பத்தை)
நேசிக்க வேண்டாம் என்றோ சொல்லவில்லை.
அது உங்களால் முடியாது
“துறவறம்!” மேற்கொள்ளுங்கள் என்றும்,
சொல்லவே இல்லையே!
நான் காப்பாற்றுவேன்! என்னால் முடியும்! இவை எல்லாம்
என்னுடையதே என்ற “தற்காப்பு” சக்தி மட்டும்,
வேண்டாம் என்கிறோம்! இது உங்களால் முடியும்!
எல்லாம் நீயே! உன்னால் முடியும்! எல்லாம் உன்னுடையதே!
எம் வினையின்படி, “அடிப்பதும்!” எம் வினையின்படி,
“அணைப்பதும்!” உனக்கு உரிமை உண்டு.
அடித்தால் அழவும்; அணைத்தால் சிரிக்கவும் தான்,
எம்மால் முடியும்! வேறொன்றும் எமக்குத் தெரியாது.
என “நிர்மலமாக!” அவனிடம் விடுவதே,
சர்வார்ப்பணமாகும்! அங்கு உன் வினை அறிந்து,
அவன் நடத்திடுவும், அதன் “கடுமை கொடு
களை, குறைத்து உன்னை ஆள, அவனுக்கு திறமை உண்டு. மை”!



கேள்வி:- ?
இக்கதையில் கூறிய பொன்னும் பெண்ணும், "அவன் வினை" சம்பந்தப்பட்டவர்களா? வினை சம்பந்தம் இல்லாதவர்களா? என கேள்வி எழலாம்?

பதில்:- "வினை சம்பந்தம் இல்லாதவர்கள்!"

கேள்வி:- அப்படியானால் வினை சம்பந்தம் இல்லாதவைகளை, ஸ்ரீ கருணையின் பகவான், அவர்கள் கண்களில் காட்டலாமா? மரண அவஸ்தையில் இருக்கப்பட்டவனுக்கு, அபயம் கொடுத்து காப்பதை விடுத்து, அவர்களை சிக்கலில் மாட்டி விடுவது, ஸ்ரீ பகவானுக்கு அழகில்லையே? இது எவ்வாறு ஸ்ரீ பகவானுக்குப் பொருந்தும்?

பதில்:- இதன் முக்கிய கருத்து யாதெனில்? மரண அவஸ்தையில், போராடுபவனுக்கு, "உயிர்தான்" முக்கியமே தவிர, "பொருள்" முக்கியமல்ல, (பொன், பொருள், பெண் போகம் முக்கியமல்ல.) என்பதை நிரூபணம் செய்வதே இக்கதையின் கருத்து ஆகும். மேலும் பொன்னோ, பொருளோ, பெண்ணோ "பிழைத்து வந்தால்தான்" அனுபவிக்க முடியும்? இறந்து போனால், இவன் எதை காண முடியும்? எதை அனுபவிக்க முடியும்? மேலும் "போரா மோரா வேகத்தின்!"



உ

# (தடுமாற்றத்தை)

"கவர்ச்சியை" சித்தரிப்பதே இக்கதையின் கருத்து ஆகும். இதை யொட்டி ஓர் சம்பவம் தருகிறேன். இதை சிரத்தையுடன், உணர்ந்து அனுபவிக்கவும்.

## ஓர் காட்டாற்று வெள்ளம்.

(அதிவேகமாக செல்லும் பிரவாகம்) ஓடிக் கொண்டிருக்கிறது. ஓர் இளமையான மனிதன், சாமக்கிரிகைகள் அடங்கிய ஓர் மூட்டையை தலையிலும், (ஒரு கையால் அதை பற்றிய நிலையிலும்) மறுகையில் தம் இளம் மனைவியை, பற்றிய நிலையிலும். அவன் மனைவி தம், இரண்டு வயது குழந்தையை, ஒக்கலில் (இடுப்பில்) தாங்கிய நிலையிலும். அக்காட்டாற்றை கடக்கின்றனர். இவர்கள் ஆற்றில் இறங்கும் நேரம், தொடையளவு இருந்த ஜலமானது, இவர்கள் பாதிதூரம் முன்பாக, வேகமாக கூட ஆரம்பித்தது. இடுப்பளவு வந்தது. அடுத்து மார்பளவு வர ஆரம்பித்தது. இவனால் "நான்கையும்" (மூட்டை, குழந்தை, மனைவி, தான்!) சமாளிக்க முடியவில்லை.

கணவன் :- பெண்ணே! ஜல வேகத்தை என்னால், சமாளிக்க முடியவில்லை, என்ன செய்வது?

மனைவி :- தலைபாரத்தை கழற்றி விடுங்கள்!

கணவன் :- சரிதான் நாம் இருவரும், உயிரோடு இருந்தால், பொருள்களை, சேகரித்துக் கொள்ளலாம் எனக்கூறிக் கொண்டே தலைபாரத்தை "நழுவ" விட்டான்.

2



அடுத்த சில வருடங்களில், மனைவியை பார்த்து
பெண்ணே! உன்னையும், குழந்தையையும்,
சமாளிக்க முடியவில்லையே, என் செய்வது
என்றான்? உடனே மனைவி, ஸ்வாமி!
நான், குழந்தையை வேண்டாமல் விட்டு
விடுகிறேன். என்னை மட்டும் விட்டு விடாதீர்
என,
கர் அழுதுவேண்டிய வண்ணம், குழந்தையை **நழுவ**
விட்டு விட்டாள். அக்குழந்தை அம்மா! அம்மா!! அம்மா!!!
என, அலறிய வண்ணம் மறைந்தது! அது சமயம் கணவன்,
மனைவியை தேற்றினான். நாம் இருவரும், பிழைத்துக் கொண்
ஓர்
டால் குழந்தையை பெற்றெடுக்கலாம் என, அவளை வாந்தி
சமாதானப் படுத்தினான். அடுத்த சில வருடங்களில், அவனால்
மனைவியையும், இழுத்துச் செல்ல முடியவில்லை! அவன் சொன்னான்
பெண்ணே! உன்னையும், என்னால் காப்பாற்ற முடியவில்லை.
"உன்னை காப்பாற்ற முயன்றால், உன்னையும் காப்பாற்ற முடியாமல்,
**நானும் இறக்க நேரிடும்!** ஆகவே
நான் ஒருவன் பிழைத்தால், வேறு மனைவியையும் திருமணம் பண்ண முடியும்.
நிறைய குழந்தைகளையும் பெற முடியும். (பொருட்களையும்) தேவையான சாமக்கிரிகை
களையும், தேடிக் கொள்ள முடியும். என சொல்லிக் கொண்டே,
"**ஆசை மனைவியையும் நழுவ**"
விட்டு விட்டான்! இக்கதையைப் போல், மரண அவஸ்தை
யோடு போராடும் ஒருவன், "**அந்தவிழை**"!
அனைத்தையும் விட்டால் மட்டும், தான் பிழைக்கலாம்!
(இது உலகியல் வார்த்தை உங்களுக்கல்ல)



உ

ஆனால் நீங்கள் அனைவரும், எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உன்னுடையதே! என, உங்கள் "மனதால்" விட்டமறு க்ஷணம், ஒன்றும் இயலாத் தன்மை என்னும், "நிர்கதி"! ஆனால்; அவனுடைய "ஸத்கதி"! உடனே சித்திக்கும். இது இப்பைத்தியச் சித்தனின் ஸ்வய அனுபவமாகும்!

அந்த இறைநிலையை பெறும் போது?

அவன் "கருணை"! எப்படி சித்திக்கும் என்றால்?

1. "தனிக்க வைப்பான்" பின்னர்

2. "தவிக்க" " பின்னர்

3. "இயலாத தன்மையை"

கொடுத்து, அனைத்தும் அவனே ஆகி நிறைவான்!

1. தனிக்க வைப்பான்:— நாமரூப ஜகம் (அனைத்து பொருள்களும்) ஸ்ரீ பகவானுடையது. அவன் பொருள். அவன் இயக்கம். அவன் பொருளாகவும் அவன் இயக்கமாகவும் இருந்தாலும், இச் ஜீவர்களின், "வினை" இல்லாமல், அவன் இயக்க முடியாது. அவனிடம், முழுமையாக சரண் புகுந்து விட்டால், உன் பிராப்தத்தின்படி, நடைபெற வேண்டியது, இயல்பாகவே நடைபெறும். ஆனால்?



உ

பிராரப்தம் இல்லாமல், ஆகாமியமாக,
நாளதையும், எண்ணவோ, சொல்லவோ,
செய்யவோ, முடியாத நிலையில், அனைத்தும்
உடனே நிற்காது. "படிப்படியாக"
நாமே குறைந்து குறைந்து குறைந்து வந்து
நிறுத்தப்படும்! அதாவது, அறியாமையினால், இன்பமாக
சுவைத்த "பொருள்களும்" "உறவு" "நட்பு" முதலியவைகளும், "சுற்றமும்"
அனைத்து நாம ரூபங்களும், உன்னிடம் நாமே தன் போக்கு
வரவுகளை குறைத்துக் கொள்ளும்! ஓர் உண்மை என்னவென்றால்?
இங்கு "தனிமை" என்பது "இனிமை" குறையும்!
"ஆனந்தம்" படிப்படியாக கூடி கூடி நிறையும்!
"இங்கு தனித்து வைப்பான்" என்ற வாசகமானது, நாம ரூப
ஜகம் "என்னுடையதல்ல" அனைத்தும்,
எம் தந்தையாகிய, ஸ்ரீ பகவானுடையது. யாம் அவருடைய
குழந்தையான படியால் அங்கு "பிறருடையதாக"
கண்டால்தான், ஆசையும், அவஸ்தையும் பெருகி துன்பத்தை
தொடக்கும். "நம்முடையதாக" உணரும் போது,
இன்ப துன்பம் குறைந்து நின்றுவிடும்! ஆனந்தம் பெருகி நிறையும்.



உ

இங்கு நாமும் நம் தந்தையுமாக, "தனித்து" நிற்போம்! அங்கு எமக்கு அன்னியம், எதுவும் இல்லாத தன்மையிருவ், இது "தனிமை" யெனப் பேசப்படுகிறது.

உ. தவித்த வைப்பான்:- நமக்கு அன்னியம், ஏதுமில்லாத் தன்மையினும், தந்தையும் தனயனும் இங்கு தனிமையில், "சமான" தன்மையாயும், இது விசிஷ்டாத்வைதம் எனப் பேசப்படுகிறது! தந்தையை, நாமரூபஜகம், நமக்கு அன்னியமாய்த் தோற்றியதாயும், நாம் நம் தந்தை ஸ்தானத்தை பெருத தன்மையாயும் "மனைஅவஸ்தையோடு" கூடியிருந்த தன்மையாயும் அது த்வைதம் எனப் பேசப்படுகிறது! இங்கு தவிக்க வைப்பான் என்று ஏன் சொல்கிறோம் என்றால்? நாமரூப குண தோஷங்கள் நாசமானாலும், நாம் நம் தந்தை ஸ்தானத்தை பெற்றாலும். ஸ்தானம் என்ற "ஸ்தாபனத்தை" பெற்றாலும், "தந்தை" என்ற, "பரிபக்குவ" நிலைக்காத "ஞானம்" அந்நிலையாகும்! இங்கு இந்த ஏக்கமே, தவிக்கும் நிலை என ஸ்ரீ மஹான்கள் சொல்வார்கள்!



உ

இங்கு நனிக்கும் நிலையும், தவிக்கும் நிலையும், எவனோ ஒருவன் என்ற கருத்தில் செய்கிறான்

கூறப்படுவதெலாம்;

நம் “மாயாமனமும்!” மாயா சொரூபியான “ஸ்ரீபகவானும்!” துவைத பாண்மையில், “கல்பிக்கப்படுவதால்” படுத்துவது ஸ்ரீபகவான் என்றும்; படுவது மனம் என்றும், உணர வேண்டும்! இவ்விரண்டும் இல்லாததே! ஆனாலும் பொய்க்கதையைச் சொல்லி, மெய்க்கு விளக்கம் கொடுக்க வேண்டியுள்ளது. அந்த மெய்யை விளக்க, வாக்கும் இல்லை! வழியும் இல்லையெனலாம்!

௩. இயலாத்தன்மையை தொடுப்பான்:— இங்கு இந்த தொடுப்பான் என்பது உபசார வசனமே! இதை “இயலாத்தன்மை” ஆகிவரும்! என்பதே, ஸத்தியமாகும். இந்நிலையில், “நாம் அதுவாகவே” இருக்கிறோம் என்ற நற்போதகம்



ஒன்றே, இங்கு இருக்க முடியும். இதுவே
"அத்வைத" நிலைமையாகும்!
இங்கு இந்நிலை பெற்றவனுக்கு, எந்த
"செயல்பாடும்" இல்லவே இல்லை!
செயல்படவும் முடியாது! செயல்படும் நிலைக்கு, மனமோ
அதைச் சார்ந்த
"ஜகத்தோ"! "ஜீவர்களோ"!
"ஈஸ்வராதிகளோ"!
மூக்காலங்களிலும் இல்லையெனலாம்!
இங்கு இயலாத்தன்மையை கொடுப்பவனோ, பெறுபவனோ,
இல்லவே இல்லை! இங்கு அனைத்தும் ஒன்றுபட்ட தன்மை
யினால், எந்த அவஸ்தைகளும் இல்லவே இல்லை. செயல்
பாடும், செயல்படுவதும் இல்லாததனால் இது, இயலாத்
தன்மை யென்று கருதப்படுகிறது என்று, ஸ்ரீ மஹான்கள்
சொல்வார்கள்!
மேலே கூறிய, மூன்று வாசகங்களுக்கும் "பக்தியின்"
நிலையில், ஸ்ரீ பகவானே கருணா சாகரம் என, சொல்லும் நிலையில்
தனிக்க வைப்பான் என்றால், ஸ்ரீ பகவானே நீயே கதி யென,
சரணாகதி பண்ணும், பக்குவ ஆன்மாவை, இவ்வுலக போகம்,



இனி உனக்குப் போதும், என்ற நிலையில்,
அனைத்து "போகங்களையும்"
நிலை (வினை) கண்டு, பக்குவம் (மனம்)
அறிந்து, கொடுப்பதை மட்டும் கொடுத்து,
எடுப்பதனைத்தும், எடுத்துக் கொண்டு (பொன், பொருள்,
உறவு, சுற்றம், நட்பு என்ற அனைத்து ஜீவ உபாதைகளையும்,
எடுத்துக் கொண்டு) தவிக்க வைப்பான்!
தவிக்கவைப்பான் என்றால், ஜாதக வாசதோஷ பழக்க
வழக்கத்தால் வரும், அனைத்து நாமரூப வஸ்துக்களும்
அவனுக்கு, "இன்பமும்" "துன்பமும்"!
கொடுக்காமல், அறியாமையால் வரும் மனஎதிர்பார்ப்பு
கள் அனைத்தையும் துண்டித்து, சில நாழிகளோ!
சில நிமிஷங்களோ, சிலமணிகளோ, (நாள் ஆகாது)
நிறுத்தி, தவிக்கவைப்பான். இந்த தவிப்பு நிரந்தரமல்ல.
தற்காலிகமாக, பயிற்சியின் நிமித்தம் கொடுப்பதாகும்.
இயலாத்தன்மை யென்பதில், மனசோர்வு அயர்வு
வருங்கால், இவன் எதிர்பார்ப்பு நிலையில், காரியம்
நடைபெறுது. இவன் எதிர்பாராமல், தெய்வம்
மனுஷ்யாளும்! என்ற நிலையில், காரியம் நடைபெறும்.
முதலில் திகைத்து கலங்குவான்! பின் ஆனந்தம் அடைவான்.
இதுவே இயலாத்தன்மையாகும்!



இறை குரு "கருணையை" பெறுவது என்றால், உன்னுடைய பரிபூரண மான, சர்வார்ப்பணமான, உலகம் நிலை பெயரினும், உன் தாலமே சிதைந்து போனாலும், மாபெரும் இழைப்பு நேரிட இருந்தாலும், (நேரிட்டாலும்) "எல்லாம் அவனே!" என்ற "நம்பிக்கை!" ஒன்றுவேயே கருணையைப் பெறமுடியும்! உன் நம்பிக்கையை, வைத்துக் கொண்டு, அந்த ஸ்ரீபகவான், "தெய்வம் மனுஷ்யானும்"!

"மனிதவடிவில் தெய்வம்!"

என்ற நிலையிலும்; நாம் "சூட்சமவடிவில்" இருந்து கொண்டும், உன்னை ரக்ஷிக்க அவனுக்கு திறமை உண்டு. தெய்வம் மனிதவடிவில், அப்போதைக்கப்போது, தோன்றி அருள்பாலிக்கும்போது, இது நம்முடைய "இறைகுரு" வடிவமே (அவரே வந்திருக்கிறார்) என, உணர ஒட்டாமல் தடுப்பது அல்ல, அல்ல, "மனப்பூதம்" உன்னுடைய மாயா மனமாகும்!



உ

காரணம்:- பலபல காலமாக, "உறவு", "சுற்றம்", "நட்பு" இவைகளின், நாமரூபங்களிலேயே

பழகி, பழகி, பழகி, பழகி, பழகி, பழகி,

"பழகிப்போன" மனமானது, அந்தந்த நாமரூபங்களிற்தான், என்னுமேயல்லாது. இது நம் ஸ்ரீபகவானே என, எண்ண முடிவதில்லை! இதற்கு எல்லாம் அவன் பொருளே! எல்லாம் அவன் செயலே!!

"அவனன்றி அணுவும்" அசையாது!

என்ற திட உணர்வு, வராததே காரணமாகிறது. அந்த தெய்வீக உணர்வு, மேலோங்கினால் தாவ சம்பந்த "உணர்ச்சிகள்"! அவசியம் நசுங்கும்!

தாவ உணர்ச்சிகள் நசித்தாலும், இறை உணர்வு பெருகும்!

இறை உணர்வு மேலோங்கினாலும், தாவ உணர்ச்சிகள் கெடும்!!

பாமர மக்கள் (அறியாமையின் மனிதர்கள்) உணர்ச்சிகளுக்கு, அடிமையாவது சகஜமே! அவர்கள் உடல் உலக பொருள் தனிலேயே, மயங்கி சொந்தம் கொண்டாடி அதை இன்ப துன்பமாக, அனுபவித்து வினைகளை பெருக்கிக் கொண்டு, ஜனன மரணத்தில், அழுவது சகஜமே! ஆனால்?



ஆத்ம சாதனை செய்து வரும், "எம்" குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும், அந்த மயக்கத்தில் சிக்க வேண்டாம் என்று உங்கள் அனைவரின் பாதம் பணிந்து வேண்டுகிறேன்!

## ஸ்ரீபகவானின் "கருணைக்கு" ஓர் விளக்கம்!

## நிர்க்கதி உண்டானால் மட்டும் "பக்தி"!

உண்மை என்பதே சத்தியம்! நிர்க்கதி என்பது, ஆதரவற்ற நிலையாகும்! நமக்கு பிடித்தமான, ஓர் ஆதரவு என்ற ஆதாரம், உள்ளமட்டும், இறைஆதரவு என்ற கருணையைப் பெற முடியாது!

ஓர் மாணவன் தன் குருநாதரிடம், என் குடும்பம் தாத்தா பாட்டி, அம்மா அப்பா, மனைவி குழந்தைகள், அண்ணா தம்பி, அக்கா தங்கைகள், மாமன் மைத்துனன், மற்றும் பிரியம் போல் உள்ள அனைத்து உறவினரும்! என்மேல், எவ்வாறு அன்பு வைத்திருக்கிறார்கள் என்பது என் ஒருவனுக்கே தெரியும். பிறர் அறியார் என்றான்! குருதேவர் சிரித்துக்கொண்டே குழந்தாய்! அது அன்பல்ல. பாசம் என்றார். அன்புக்கும் பாசத்திற்கும், என்ன வித்தியாசம் என்றான்?

"பாசம்" என்பது, உடல் பொருள் சம்பந்தம் உள்ளது!

"அன்பு" என்பது உள்ளத்தின், கனிவும் கருணையும் என்றார்!

அப்படியானால் என் குடும்பத்தார், என் மீது அன்பு காட்டாமல் பாசம் காட்டுகிறார்கள் என்று, சொல்கிறீர்கள் என்றான்!



உ

ஆமாம் குழந்தாய் என்றார்! அது சரி, அது அன்பா பாசமா? என்பதை அப்புறம் விளக்கம் கேட்டுக் கொள்கிறேன் இப்போது என்குடும்பத்தார் "என்னை" பற்றி இருக்கிறார்களா? அவர்களை "நான்" பற்றியிருக்கிறேனா? என்றான்?

உன் குடும்பத்தாரை "நீதான்!" பற்றியிருக்கிறாய்! என்றார்!

இதை நிரூபிக்க முடியுமா? எனக் கேட்டான் அம்மாணவன்.

நிரூபிக்கவா மேலே, என அவனை அழைத்துக் கொண்டு ஓர் ஏரிக் கரைக்கு வந்தார் ஸ்ரீ குருதேவர். அந்த ஏரிக் கரையில், ஓர் பெரிய ஆலமரம் இருந்தது. அம்மரத்தின் கிளை ஒன்று, அந்த ஏரியின், கால்பகுதி வரை தாழ்ந்து வளர்ந்து இருந்தது.

மாணவனை அழைத்து, அம்மரத்தில் ஏறச் சொன்னார்! அவன் அதில் ஏறினான். அந்த தாழ்ந்த கிளையை, மெதுவாக பற்றி, கடைசி நுனி வரை செல் என்றார். அவனும் அவ்வாறே சென்றான். அக்கிளையைப் பற்றிய வாறு, தொங்கு என்றார். அவனும் அவ்வாறே, அக்கிளையைப் பற்றிக் கொண்டு, தொங்கினான். நன்றாக இருகப் பற்றிக் கொள் என்றார். அவனும் இருகப் பற்றிக் கொண்டான்.

இப்போது ஸ்ரீ குருதேவர் கேட்டார்? அன்பான குழந்தாய்! அக்கிளையை "நீ பற்றியிருக்கிறாயா" ????? அல்லது அக்கிளை "உன்னைப் பற்றி" இருக்கிறதா??? எனக் கேட்டார் குருதேவர்?



குருதேவா! "நான்தான்" அக்கிளையைப் பற்றி இருக்கிறேனே தவிர, அக்கிளை "என்னைப்" பற்றவில்லை என்றான்.

குருதேவரும் சிரித்துக் கொண்டே, என் அன்பான குழந்தையே! அக்கிளையை, எப்படி பற்றியிருக்கிறாய் என்றார்? அம்மாணவனும் குருதேவா! அக்கிளையை, "நான் என் இரு கரம் கொண்டு, இறுகப் பற்றி இருக்கிறேன் என்றான்! இப்போது, உன் இரு கைகளையும், விட்டு விட்டால் நீ என்னவாய் என்றார்? ஏரி ஜலத்தில் விழுந்து விடுவேன் என்றான்! உன் கரங்கள் இரண்டும், அக்கிளையை விட்டால், நீ ஜலத்தில் விழ, ஒரு மணி நேரமாகுமா? ஒரு நாள் ஆகுமா? ஒரு வாரமாகுமா? ஒரு மாதம் ஆகுமா? ஒரு வருடமாகுமா? என சிரித்துக் கொண்டே கேட்டார். அம்மாணவனும், பவ்யமாக சிரித்துக் கொண்டே இப்படிச் சொன்னான்! என் குருபெருமானே! இது என்ன அசட்டுத்தனமான கேள்வி? மணியாவது? நாளாவது? வாரமாவது? மாதமாவது? வருடமாவது? "அடுத்த வினாடியே"! ஏரி ஜலத்தில், விழுந்து விடுவேன் என்றான்! குருதேவரும் சரி சரி, உன் கைகளை விட்டு, ஜலத்தில் விழுந்து நீந்திக் கொண்டு, இங்கு என்னிடம் வா என்றார். அம்மாணவனும், அவ்வாறே ஜலத்தில் விழுந்து நீந்தி கரையில் குருதேவரிடம் வந்து சேர்ந்தான்!

உ

ஸ்ரீ குருதேவர் வாசகமாவது!



குழந்தாய்! அம்மரத்தின் இலை, தழை, கிளை, பூ, பிஞ்சு, காய், கனி போன்றதே, "உன் குடும்பம்!" மேலே கூறிய இவை அனைத்தும், "அம்மரத்திற்கு!"

அன்னியமில்லை என்பதே ஐக்கியம்! அவை அனைத்தும் ஒழுங்காக பாரபட்ச தோஷமில்லாமல், எந்த சிரமமும் இல்லாமல் ஒழுங்காக இருக்கின்றன (செயல்படுகின்றன) அம்மரமே இயற்கையின் இறைவனுமாகும்! அம்மரத்தின், இலை, தழை, கிளை, பூ, பிஞ்சு, காய், கனி, இவை அனைத்தும் அம்மரத்திற்கு அன்னியமில்லை! ஆனால் நீயோ, "ஸ்ரீபகவான்!" அம்சமாகிய "ஆத்மா" ஆகும்! நீ இங்கு அவன் கருணையினால், விளையாட வந்தவனே, உனக்கு "மனம்!" என ஒன்றை தம்மாயாவால் விருந்தளித்து, விளையாட கொடுத்தானேயன்றி, "விஷயமாக" (வினையாக) கொண்டாட கொடுக்கவே இல்லை! சங்கல்பம் விகல்பம் (துன்பமும் அதன் குற்றவுணர்வும்) "ஆசை, கோபம்!"



உ

விளையாட்டின் நிமித்தம், உனக்கு
தேவையென்றே ஸ்ரீ பகவான் கொடுத்தான்.
ஆனால் அவை இரண்டையும், (ஆசையையும்,
கோபத்தையும்) பேராசை, மோஹம்,
காமம் எனவும், குரோதம், விரோதம்,
அஹங்காரம் எனவும், ஆக்கிக் கொண்டு, இவை அனைத்தை
யும், உடைமை, உரிமை பாராட்டும் நிலையில், மானவமானம்
சூடு, சுரணை, வசை, வெட்கம் என்ற நிலையில்,
"அபிமானம்" கொண்டு, அம்மன
வலையில் சிக்கிக் கொண்டாய்! அம்மரத்திலுள்ள,
இலை, பூ, பிஞ்சு, காய், கனி ஆகிய இவை "ஐந்தும்"
"அளவோடு" புசிக்க (விளையாட) கொடுத்
தானேயன்றி, உரிமையும், உடைமையும், ஆதிக்கமும்,
அதிகாரமும், அஹங்காரமும் "பண்ணக்"
கொடுக்கவேயில்லை! இப்போது நீ அக்கிளையைப் பற்றிய
நிலையில் சொல்லும் போது "நான்" என்றும்,
"என்னுடையது" என்றும், உன்னுடைய
(அஹங்கார அபிமான) இரு கரங்களாலும் பற்றிக் கொண்டு
குடும்பமே என்னைப் பற்றியிருக்கிறதென்று, சொல்கிறாயே
இது பொருத்தமா?



நீ காணும் அனைத்து "நாமரூப"! வஸ்துக்களும், உறவு சுற்ற நட்புகளும், அம்மரம் என்ற, "இறை" சொரூபத் திற்கு, அன்னியமில்லை! இலை, பூ, பிஞ்சு, காய், கனி, ஐஸ்வர்யம், போக போக்கிய வஸ்துக்கள் யாவும், உன் விளையாட்டின் நிமித்தம் கொடுத்தவைகளாகும். நீ அவைகளை, "உன்னுடையதாக"! பாவனை கொண்ட தன்மையே, "வினை" பெருக்கமும் "ஜனனமரண"! இணைப்புமாகும். உன் சொந்த, பந்த, பாச, பற்று, எல்லாம், "நான்"! என்ற அஹங்கார, அதிகார, ஆதிக்க சம்பந்த உரிமையும், உடைமையும்! "என்னுடையது"! என்ற சூது, சுரணை, வசை, வெட்கம், மானவமானம் என்ற "அபிமானமும்"! ஆகும்! அதாவது நான் என்னுடையது என்ற, அஹங்கார, அபிமானப்பிடிப்பே, உன் இருகரங்களாகும். நீயாகவே உன் குடும்பத்தை பலமாக நான் காப்பாற்றுகிறேன்! என்றெண்ணியும்! என்னுடையவர்களே என மார்தட்டிக்கொண்டு



உ

பற்றிக் கொண்டு, குடும்பம் என்னும்
பற்றி யிருக்கிறதென்று, அறியாமையில்
அதாவது, உன் கவனக்குறைவினால்,
சொல்வது சற்றும் பொருந்தாது. உன்
மனமுடைமையான, "நான்!" என்ற
அகங்காரத்தையும், "என்னுடையது!"
என்ற அபிமானத்தையும், எந்த விநாடி நிர்மூலமாக்கு
கிறாயோ, "அந்த விநாடியே!
நீ ஜீவன் முக்தனே"!!!
"நம்பிக்கை"! என்றால் நம்புவது உன் பணியாகும்!
கைகொடுப்பது ஸத்குரு கடமையாகும். ஸ்ரீபகவானை
"நம்பினால் கருணை" பெறலாம்! ஸத்குருவை
" அபயகரம் பெறலாம்! ஸ்ரீபகவான் வேறு,
ஸத்குரு வேறல்ல! இரண்டும் ஒன்றே! ஆகவே தான்
"நம்பினால்" கருணையும் பெறலாம் அபயகரமும் பெறலாம் இது உறுதி
நம்பிக்கை கடவுளாகும்! சந்தேகம் காலனாகும்!!
எல்லாம் ஒன்றே! அது நவமே!
அதுயானும்!
அது நீயே! இது ஸத்யம்! ஸத்யம்!! ஸத்யம்!!!

பாபா.



# "மாயவனும்" "மாயையும்"!

தண்டகவனத்தில் ஸ்ரீ ராமன் தம் மனைவி சீதையை, பறிகொடுத்த நிலையில், தம்பி லக்ஷ்மணனுடன், சீதாவை தேடிக்கொண்டு சீதா! சீதா!! என அலறி அலறி அழுத நிலையில், மேற்கு தொடர்ச்சி மலை காடுகளில், தென் திசையை நோக்கி, போய்க்கொண்டிருக்கிறான்!

அது சமயம், கைலாயத்தில், பரமனாகிய பரமேஸ்வரனுடன்! அன்னை பார்வதிதேவி! இக்காட்சியை கண்ணுற்றாள்!

பார்வதி:- ஸ்வாமி! இந்த ராமன், மஹாவிஷ்ணு அம்சம் தானே?

சிவபெருமான்:- ஆமாம் பெண்ணே!

பார்வதி:- அப்படியானால் இந்த ராமாவதாரம், "பூர்ணாவதாரம்" தானே?

சிவபெருமான்:- அதில் என்ன சந்தேகம்? நம்ராமன் பூர்ணாவதார சொரூபமே!

பார்வதி:- அப்படியானால்? பூரணாவதாரத்திற்கு, "சோகம்", "மோஹம்", "பயம்", "கவலை", "துக்கம்" ஏன்?

சிவபெருமான்:- நீ எவைகளை வைத்து இந்த ஐந்து தூர்க்குணங்களையும், கற்பனை பண்ணி பார்க்கிறாய்?



பார்வதி:- நீங்கள் காணவில்லையா, இந்த ராமனின் சோகக் காட்சியை? மனைவியை பிரிந்துவிட்டோமே என்ற "பிரிவாற்றத்" துயரத்தால், யாம் மேலே கூறிய, இந்த குணங்களும் அந்த ராமனை இந்தப்பாடு படுத்துகிறதே! பூரண நிறைவு, உள்ள ஒருவனுக்கு, இக்குணங்கள் இருக்கக்கூடுமோ?

சிவபெருமான்:- தேவி! எம் ராமனிடம், நீ சொல்லும் நற்குணங்கள் "ஸத்யமாய்"! உண்டு என நம்புகிறாயா?

தேவி:- நேருக்கு நேராக, எம் "கண்களால்"! காண்கின்றோம்! அவன் சீதா! சீதா! என்று, அலறும் அலறலை எம் "காதுகளால்"! கேட்கின்றோம்! அவன் கண்களில், சோகக் கண்ணீர் தாரை தாரையாக, கொட்டுகிறது! ஓர் "ஸ்திதப்பிரக்ஞனுக்கு"! இவை, எப்படி இருக்கக்கூடும்? இவைகள் இருந்தால், அவன் "ஸாமான்யன் தானே?"

பெருமான்:- (கடகடகடகடவென சிரித்துக்கொண்டே)



உ

ஓம் தேவி! நீ சொல்லும் நியாயம்,
ஸாமான்யனும் இருக்கமுடியும்!
அதைபோல, ஓர் சிறந்த **நடிகனும்** இருந்து நடிக்க முடியுமல்லவா?

தேவி:— ஸ்வாமி! அப்படியானால், இந்த ராமன், நடிக்கிறான் என்று சொல்கிறீர்களா?

பரமன்:— எம் அறிவுக்கு அவ்வாறுதான் தோற்றுகிறது. உனக்கு சந்தேகம் தோன்றினால், நீயே நேரில் சென்று, பரீக்ஷித்து பார்க்கலாமே?

இவ்வாசகங்களை கேட்ட பார்வதி தேவி, உடனே பூலோகம் வந்து, பரீக்ஷித்து பார்க்கும் நிமித்தம், எம்ராமன், எந்த சீதாவை தேடி அவளை அழுது அலைகிறானோ, அந்த சீதாவாக, தம் மாயையினால், வடிவெடுத்து ராமனுக்கு எதிரில் வருவதைப் போல், ஓர் செடி மறைவிலிருந்து வந்து சேலைத் தலைப்பை முடுக்கிக்கொண்டு, **நாணிக்கோணி** நம் மாயாவின், ஸாகஸத்தை, காட்டி நின்றாள் தேவி!

மாயாவின் அதிபதியாகிய **மாயவனை** ஸ்ரீராமனும், அவள் அறியா வண்ணம் கவனித்துக்கொண்டே செடிகொடிகளை, ஒதுக்கிக்கொண்டே, வேறு வழியாக, சென்றுவிட்டான். நம்மை கவனிக்காமல்தான், இந்த ராமன் செல்கிறான் எனக் கருதிய சீதை, சற்று முன் சென்று, முன் போலவே, அவன் வழியை மறைத்து, நின்றாள். முன் போலவே, ஸ்ரீராமனும் ஒதுங்கிச் சென்றான். இப்படியாக, மூன்று முறை, போலி மாயாவான தேவி முயற்சி செய்தும், பயன் அளிக்கவில்லை!



உ

நான்காவது முறையாக, பார்வதி தேவியானவர், ஸ்ரீராமனின் முன் வந்து, சீதாவாக, வழி மறித்து நிற்க, எம் ராமன் சொன்னான் :— அம்மா தாயே! "மாயா"! இன்று விளையாட, உனக்கு வேறு இடம், கிடைக்கவில்லையா?

தேவி :— தாங்கள் சீதையைத் தேடித்தானே, அலறி அழுது தேடி அலைகிறீர்கள்? ஆகவே யாம் சீதாவாக வந்தோம். எம்மை எப்படி கண்டு கொண்டீர்கள்?

ராமன் :— எம்மிடம் தோன்றியவளோ நீ! எம்மிடமே உன் விளையாட்டா? யாம் இப்போது போட்ட வேடத்திற்கு, "நடித்துக்கொண்டிருக்கிறோம்!" நாம் வேடம் போட்டால், குறைந்த வேண்டும்! ஒரு முறை வேடம் போட்டால், உழைக்க வேண்டும்! "யாம்" இந்த வேடத்திற்கு, "அழுது" நடிக்க வேண்டும்! யாம் இப்படி நடிக்கவில்லையாயின், எம்மை பின்பற்றும், "ஞானிகளும்" நடிக்கத் தயங்குவர்! ஆகவே திறம்பட நடிக்கவாம். அந்த நடிப்பில் "நான்", "எனது" என மயங்கி விடக்கூடாது! எமது நடிப்பில், வாலி வதம்! அனுமன் சகாயம்! சேது பந்தனம்! விபீடண சரணாகதி! பின்னர் ராவண கும்பகர்ண வதம்!



முடிவில் "சீதா அக்கினி" பிரவேசம், செய்தபிறகுதான், சீதா எம் மனைவியாவாள்! அதற்கு முன்னதாக, கதையையே மாற்றுகிறாயே?

திட்டமிட்டு தயாரிக்கப்பட்ட, கதையில் மாற்றம் மறுப்பு, எதுவும் இல்லை!

ஸ்ரீ தேவி:— அப்படியானால், மாரீசனானவன் மாய மானாக, வரும் போது அவனை இன்னார் எனத் தெரிந்துதான், "தெரியாதவன்" போல் அம்மான் பின்னால் சென்றாயா?

ஸ்ரீராமன்:— ஆமாம்! அதுவும் ஓர் திட்டமிட்ட காரியமே. நடிப்பு என வந்து விட்டால், "மனம்" "படைத்த" மனிதர்கள் கண்களுக்கு, உண்மையாகவே தோற்ற வேண்டுமே. அந்த மாரீசனை, முடித்துக் கிடத்தியும், ஓர் உண்மையை புகட்டியிருக்கிறோம். என்னவென்றால்? எம் தம்பி லக்ஷ்மணன், எம் ஸ்ரீ மாதா பிதா எம்மை வனத்திற்கு அனுப்பியதை எண்ணி அதை தடுக்கிறது, அண்ணா! "விதி"யெனச் சொல்கிறானே. அந்த விதியை, யாம் இப்போது மாற்றிக் காட்டுகிறோம். எமக்கு அனுமதி கொடுங்கள் என்றான்.



உ

அதற்கு யாம் தம்பி! பொறு! பொறு! நீ இப்பொழுது திறமையை, மாற்றும் திறமையை, பின் தெரு இடத்தில் காட்டுகிறேன். அங்கு உன் திறமையை காட்டு என்றேன். அதன்படி, யாம் மாரீசன் என்ற மான் மாயமான்தான், எனத் தெரிந்தும், ஏன் என்றும் தெரியாதவன் போல் மானின் பின் சென்று அதை முடித்தோம். தம் அண்ணியாருக்கு காவலாய் நின்ற, எம் தம்பியை, எம் சீதா, "சந்தேக" நோக்குடன், ஓர் கடும் சுடும் கபட வார்த்தை சொன்னாள். அவ்வார்த்தை யாவது:- "போனவன் காணி" "இருந்தவைக்கு"! என எண்ணினையா? எனக் கேட்டாள். அந்த ஒரு வார்த்தையால் தம் "வைராக்கியத்தை" இழந்தான் தம்பி லக்ஷ்மணன். அங்கு விதியின் வழியே மகி சென்றது. அங்கு "விதியை" அவன் வெல்ல முடியவில்லை; என்று சொல்வதை விட, திட்டமிட்ட காரியம், திட்டமிட்டபடி, ஒழுங்காக நடைபெற்றது. ஆனால் இந்த நிகழ்ச்சி, ஜீவநதியில் "மனம்" படைத்தோருக்கு, ஓர் மாபெரும் "தோல்வியாகும்"!



உ

மனதை மாயையிடமும் (இறைவனிடம்)
விட்டவர்களுக்கு, தோல்வியும் இல்லை!
அதன் சோர்வும் இல்லை! அங்கு சாட்சி
பாவனை மேலோங்குவதால், வெற்றி தோல்வி
இல்லாமலும், லாபநஷ்டம் இல்லாமலும்
உள்ள "சமநிலை" ஆகும்! இதை உலகோர்க்கு
சொன்னால், எவரும் ஏற்க முடியாது! ஏற்க முடியாதுதான்!
இங்கு புண்ணிய பாவங்கள், பின்னி விளையாடுவதால்,
இவைகளை ஏற்க முடியாது!
ஆனால் சாட்சி நிலையில், (தெய்வீகத்தில்) ஸத்திய தர்மங்கள்
"நிறைவோடு" இருப்பதால், இங்கு எந்த
பேதமோ! விருப்பு வெறுப்போ! குற்ற உணர்வோ!
அதைச் சார்ந்த, புண்ணிய பாவமென்பதும், லாபநஷ்டமோ
இருக்க முடியாது! இங்கு சாந்தி, அமைதி, மௌனம்,
இவற்றுடன் கூடிய, "ஆனந்தம்" ஒன்றே நிலவும்!
ஆனால், பரசொரூபத்திற்கு, புண்ணிய பாவங்களோ,
ஸத்திய தர்மங்களோ, இல்லவே இல்லை. அங்கு அனைத்தும்,
ஒன்றாய், "தாம்தாமாய்" அதுவாகவே இருக்கும்!
அந்நிலை பெற, உங்கள் அனைவரையும், வாழ்த்தி இந்த
இதழை முடிக்கிறேன்!
எல்லாம் ஒன்றே! அது நவமே!

பாபா.

அதுயானே!
அது நீயே! இது ஸத்தியம்! ஸத்தியம்!! ஸத்தியம்!!!


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Adobe of Love
You are Everything!